பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 சித்திரை 18 புதன்கிழமை (01-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:157

# மேதினப் பேரணி இணுவிலில் ஆரம்பம் மருதனார்மடத்தில் பொதுக்கூட்டம்!

யாழ்ப்பாணம்,மே1

தேசிய இனம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய தமிழ்மக்களின் அபிலாஷைகளை உலகறிய முழங்கும் வகையில் எழுச்சியுடன் கூட்டு, மேதினப் பேரணி, பொதுக்கூட்டத்துடன் இன்று இணுவிலில் இடம்பெறவுள்ளது.

இணுவில் லங்கா சிமெந்து நிறுவனம் முன்பாகக் கூடும் பெரும் எண்ணிக்கையான மக்கள், இன்று பிற்பகல் 3.30 மணிக்கு எழுச்சியுடன் தமது பேரணியை ஆரம்பிக்கவிருக்கின்றனர்.

காங்கேசன்துறை வீதி வழியாக மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மைதானத்தை பேரணி அடைந்ததும மாலை 4 மணிக்கு அங்கு மேதினப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

ஈழத்தமிழ் தொழிலாளர்கள், தமிழ் மக்கள் ஆகியோரின் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் பிரகடனம் ஒன்று அங்கு முதலில் வெளியிடப்படும்.

அதைத் தொடர்ந்து இடம்பெறும் பொதுக்கூட்டத்தில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மாணவர் அமைப்புப் பிரதிநிதிகள், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், புதிய ஜனநாயகக்கட்சி பிரதிநிதி, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பிரதிநிதிகள் ஆகியோர் உரையாற்றுவர்.

பேரணியிலும் கூட்டத்திலும் பொதுமக்கள் பங்குபற்ற வசதியாக சகல பகுதிகளில் இருந்தும் இலவச போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்று ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (உ-3-10)

## நாடு முழுவதிலும் இன்று சமாதானத்தை வலியுறுத்தி மேதினக் கொண்டாட்டம்!

### மேதினப் பேரணி: ஜனாதிபதிக்கு பிரதமர் அழைப்பு

சமாதானத்தை வலியுறுத்தி ஆளும் ஐக்கிய தேசிய முன்னணி இன்று கொழும்பில் நடத்தும் மேதினக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், எதிர்க்கட்சியினருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

எழுத்துமூலமாக் இந்த அழைப்பு விடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஜனாதிபதி இந்த அழைப்பை ஏற்றாரா, இல்லையா என்பது குறித்து நேற்றிரவு வரை தகவல் வெளியாகவில்லை.

ஜனாதிபதி தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் மேதினக் கூட்டம் அப்புத்தளையில் இடம்பெறவுள்ளது. (உ)

## ஜே.வி.பி. மட்டும் தனிவழியில்

கொழும்பு,மே1

**உலகத் தொழிலாளர் திருநாளான மேதினம், பல்லாண்டுகளுக்குப் பிறகு அச்சமற்ற - அமைதியான - சூழ்நிலையில் இன்று நாடுமுழுவதிலும் கொண்டாடப்படுகிறது.**

**இன்றைய மேதினத்தை பெரும்பாலான அரசியற்கட்சிகளும், தொழிற் சங்கங்களும் சமாதானத்தை வலியுறுத்தும் நிகழ்வாக முன்னெடுக்கின்றன. ஆனால், ஜே.வி.பி. மட்டும் சமாதான முயற்சிகளுக்கு எதிரான கிளர்ச்சி வடிவமாக இன்றைய மேதினத்தைக் கொண்டாடத் தீர்மானித்திருக்கின்றது.**

அரசியல் கட்சிகளும், தொழிற்சங்கங்களும் மேதின ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்த விரிவான ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றன.

கொழும்பில் மேதினப் பேரணிகள் மற்றும் கூட்டங்களை முன்னிட்டு நகரின் பல வீதிகள் வாகனப் போக்குவரத்துக்கு இன்று நண்பகல்முதல் மூடப்படுகின்றன.

ஆளும் ஐ.தே.முன்னணியின் முதலாவது மேதினக் கொண்டாட்டம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. கண்காணிப்புக் குழு நேற்று வன்னிக்கு விஜயம்!

கிளிநொச்சி,மே1

உலக நாடுகளில் யுத்தநிறுத்தங்களைக் கண்காணிக்கும் ஐ.நாவின் குழு நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டது.

பன்னிரண்டு அதிகாரிகள் அங்கம் வகித்த இக்குழு, தரைவழியாக வாகனங்களில் கிளிநொச்சிக்கு நேற்றுக்காலை 11மணிக்கு வந்தடைந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கையைக் கண்காணிக்கும் சர்வதேசக் கண்காணிப்புக் குழுவின் கிளிநொச்சி அலுவலகத்துக்கு ஐ.நா.குழு சென்றது.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்யப்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தும்விதம் குறித்து ஐ.நா. குழு கேட்டறிந்தது.

கலந்துரையாடல்களை அடுத்து நேற்று மாலையே ஐ.நா. குழு கொழும்பு புறப்பட்டது. (உ-3)

### இராணுவச் சீருடை வைத்திருந்த குற்றச்சாட்டு

## புலிகள் பிரதிநிதி துரைக்கு நீதிமன்றம் பிணை அனுமதி!

மட்டக்களப்பு,மே1

கடந்த சனிக்கிழமை மண்டூர் சோதனைச்சாவடியில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு பின்னர் பொலீஸாரால் பிணையில் விடுவிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் துரை நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜரானார்.

இராணுவச சீருடை, மூன்று ரவைகள் ஆகியவற்றை படையினரின் சோதனைச்சாவடி ஊடாக எடுத்துச் சென்றதாகத் தெரிவித்து விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்ட இவர், பொலீஸாரிடம் ஒப்படைக்கப் பட்டிருந்தார். பின்னர் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



அப்ப... 'என் கேள்விக்கென்ன பதில்?' - என்று முழக்கமிடுகிறா போலை அம்மணி...!

### ஒப்பந்தத்தால் நாட்டுக்கு அச்சுறுத்தல்!

## பிரதமரின் பதிலை எதிர்பார்த்து காத்திருக்கிறாராம் ஜனாதிபதி!

கொழும்பு,மே1

அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகக் கவலை தெரிவித்து, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு தாம் எழுதிய கடிதம் தொடர்பாக பிரதமரின் பதிலை ஜனாதிபதி எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்.

ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் இந்தியாவுக்கு ஒரு வார விஜயமாகப் புறப்பட்டுச் செல்ல முன்னர் இக்கடிதத்தைப் பிரதமருக்கு அனுப்பி வைத்திருந்தார்.

தேசிய பந்தோபஸ்து உட்பட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்தும் அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தால் இந்த முக்கிய விடயங்கள் தொடர்பாக எழுந்துள்ள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படையினரின் சூட்டுக்கு நிலாவெளியில் இருவர் காயம்!

திருகோணமலை,மே1

நிலாவெளிப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கடற்படையினரால் சரமாரியாகத் தீர்க்கப்பட்ட வேட்டுக்களுக்கு இலக்காகி அப்பகுதியில் வசித்த சிவிலியன்கள் இருவர் படுகாயமடைந்தனர்.

சுந்தரலிங்கம் சுபாஜினி (வயது 16) என்ற தரம் ஒன்பது வகுப்பில் கற்கும் மாணவியும் மாரிமுத்து பேச்சுமுத்து (வயது43) என்பவருமே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினர்.

சம்பவம் பற்றி சுபாஜினியின் தாயார் வசந்தகுமாரி சுந்தரலிங்கம் கூறியதாவது:

எனது மகள் படித்துவிட்டு வெளியே முற்றத்தில் நின்றுகொண்டிருந்தார். அப்போது இரவு 9.30 மணி இருக்கும் நான் வசிக்கும் கோபாலபுரம் 9ஆம் கட்டை கிராமத்தில் இருந்து ஒரு மைல் தூரத்திற்கு அப்பால் உள்ள நிலாவெளி கடற்படை முகாமில் இருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கும் சத்தம் கேட்டது. மகளை வீட்டுக்குள் வந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தடையைத் தளர்த்தி அல்லது நீக்கி புலிகளைப் பேச்சுக்கு அழைப்போம்!

### பிரதமர் ரணில் கூறியதாகத் தகவல்

கொழும்பு,மே1

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கியோ அல்லது தளர்த்தியோதான் அவர்களைப் பேச்சு மேசைக்கு அழைக்கவுள்ளோம்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார் என்று செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

பிரதமர் குறிப்பிட்டதாகத் தெரிவித்து அச்செய்தி ஏஜென்ஸி மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டாம் என்று கூறுபவர்கள், புலிகளை எவ்வாறு பேச்சு மேசைக்கு அழைத்துவருவது என்பதை மட்டும் கூறமறுக்கிறார்கள்.

இதனால்தான் இந்தத் தடையை நீக்குவதைத் தவிர எமக்கு வேறு

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# முழுத் தீவுப்பகுதியும் ராணுவ பிரதேசமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்புச் சீற்றம்!

## யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே1

தீவுப் பகுதியை இராணுவப் பிரதேசமென கடற்படையின் யாழ். தளபதி கூறிய கருத்தை வன்மையாக ஆட்சேபிக்கிறோம். கடற்படைத் தளபதி தான் விரும்பிய நேரத்தில் விரும்பிய பிரதேசத்தை இராணுவப் பிரதேசமென்று பிரகடனம் செய்ய முடியாது.

- மேற்கண்டவாறு தமிழர் தேசிய கூட்டமைப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் யாழ். பிரிவு அதிகாரிகளை நேற்றுக் காலை நேரில் சந்தித்த கூட்டமைப்பு தூதுக்குழு மேற்கண்டவாறு பிரஸ்தாபித்துள்ளது.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான [illegible]ராசா, முன்னாள் நாடா[illegible]றுப்பினரான சி.சிவமகாராசா, கூட்டணிப் பிரமுகர் எஸ்.குலநாயகம் ஆகியோர் [illegible]ப்புக் குழுவை சந்த[illegible]

தூதுக்குழு முன்வைத்த கோரிக்கைகள் சில வருமாறு:-

மக்கள் வாழும் இடங்களிலும், மீளக்குடியேறுமிடங்களிலிருந்தும் இராணுவம், கடற்படை வெளியேறவேண்டுமே தவிர, அப்பிரதேசங்களைக் கைப்பற்றி வைத்திருப்பதாக அறிவித்து தமிழீழ விடுதலைப் புலிகளும் ஏனைய அரசியற் கட்சிகளும் தங்கள் அரசியற் கடமைகளை நிறைவேற்றத் தடையாக இருக்கக்கூடாது.

புரிந்துணர்வு உடன்பாட்டின் நோக்கம் போர்நிறுத்தம் செய்வது மட்டுமல்ல. பேச்சு மூலம் இந்நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதுமேயாகும்.

நல்ல நோக்குடன் கைபெழுத்திட்ட இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் நோககம், முகவுரையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த அடிப்படைகளிலிருந்துதான் ஒப்பந்த விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டுமே தவிர, படைத் தளபதியின் தன்னிச்சையான விளக்கங்களின் அடிப்படையில் அல்ல. அடிப்படை நோக்கத்தையே சீகுலைத்துவிடும் நடவடிக்கைகளில் படைத் தளபதிகள் ஈடுபடாமலிருக்க அரசு பார்த்துக்கொள்ளவேண்டும். இரு தரப்புக்கும் இக்கருத்து பொருத்தமானதே.

மக்கள் நெருங்கி வாழும் நகரப் பிரதேசங்களில் மக்கள் துன்புறுத்தப்படுவது தவிர்க்கப்படும் வகையில் 90 நாள்களில் சோதனைச்சாவடிகள் மாற்றியமைக்கப்படவேண்டும்.

யாழ்நகரத்தின் மத்தியில் உள்ள 512 ஆவது படைத்தளம், யாழ்நகரக் குடிமக்கள் மிக நெருக்கமாக வாழும் இடத்தில் அமைந்துள்ளது. நகரப் போக்குவரத்து நிலையம், வர்த்தக நிலையங்கள், யாழ்.போதனா வைத்தியசாலை என்பவற்றுக்கிடையே அது அமைந்திருப்பதால் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒரு பகுதி மூடப்படவேண்டியுள்ளதுடன் தனிப்பட்டவர்களின் வீடுகளும் தெருக்களும் வர்த்தக நிறுவனங்களும் பொதுமக்கள் பயன்படுத்தப்படமுடியாமலுள்ளன.

ஒப்பந்த சரத்து 2.2, 2.3, 2.4, 2.5 ஆகியவற்றின்படி பொதுமக்களின் பாவனைக்குரிய நிறுவனங்கள் தடையின்றிச் செயற்பட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்தக் கோரிக்கைகள் குறித்து பதில் அளித்த கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர் ஜோர்ஜன் பாக்லூண்ட், கடற்படையினர் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக கடற்பிரதேசம் தொடர்பான உடன்பாடு ஏற்பாடுகள் பரிசீலிக்கப்படுகின்றன.

- என்று தெரிவித்தார். (உ-3)

# சமாதான முயற்சி கௌரவமான சமாதானத்தைத் தரவேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா மேதினச் செய்தி

இன்றைய சமாதான முயற்சியின் இறுதிப் பெறுபேறு கௌரவத்துடனான சமாதானத்தை அடைவதாக இருக்கவேண்டும். அது உழைக்கும் வர்க்கத்தின் ஜனநாயக உரிமைகள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டும் - என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது மேதினச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதியின் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

இன்று இலங்கையிலுள்ள தொழிலாளர் இரண்டு சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

உலக மயமாக்கலின் நன்மைகளுடன் இணைந்துவரும் பாதகமான விளைவுகள் ஒரு சவாலாகும். நவீன உலக முதலாளித்துவத்திலிருந்து வரும் புதிய தொழில்நுட்பத்தின் நன்மைகள் மற்றொன்றாகும்.

உலக முதலாளித்துவத்தின் பாதகமான விளைவுகள் தொழிலாளர் வர்க்கத்தின் தொழில் பாதுகாப்பிலும் சேமநலன்களிலும் நேரடித் தாக்கத்தைக் கொண்டிருக்கின்றன.

இந்நாட்டு அனைத்து மக்களினதும் ஜனநாயக உரிமைகள், மனித உரிமைகள், சமத்துவம் ஆகியவை பாதுகாக்கப்பட்டால் மட்டுமே உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

சகல இன, மத குழுக்களினதும் ஜனநாயக உரிமைகளுடனும் சுதந்திரங்களுடனும் உழைக்கும் வர்க்கத்தின் உரிமைகள் இணைந்தே இருக்கின்றன - என்றுள்ளது.

# பிரச்சினைகளை வென்று நிரந்தர சமாதானத்துக்கு உறுதிபூணுவோம்

## பிரதமர் ரணிலின் மேதினச் செய்தி

கொழும்பு,மே1

கடினமான சமாதானப் பயணத்தில் பிரச்சினைகளை வெற்றிகொண்டு நிரந்தர சமாதானத்தை அடைய உறுதிகொள்ளவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேதினச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

இன்று கொண்டாடப்படும் மேதினத்தை முன்னிட்டு பிரதமர் விடுத்திருக்கும் செய்தி வருமாறு:-

நிரந்தர சமாதானத்தை நோக்கிச் செல்லும் மிகக் கடுமையானதும், சிக்கலானதுமான இந்தப் பயணத்தில் காலடியெடுத்து வைத்திருக்கிறோம். இவ்வேளையில், சமாதானத்திற்காக வேண்டி நாங்கள் தேசிய மேதினத்தைக் கொண்டாடுவோம். இன்று எங்கள் எல்லோரதும் பொதுவான பிரார்த்தனை சமாதானமாகும். இந்தப் பிரார்த்தனையை ஒரே இரவில் நிறைவேற்றிக்கொள்வது இலகுவான காரியமல்ல. இதற்காக நாங்கள் முகங்கொடுக்கக்கூடிய பிரச்சினைகள் பலவாகும். பல அர்ப்பணிப்புகளையும் மேற்கொள்ளவேண்டும். இதற்காகச் செல்லக்கூடிய தூரமும் அதிகமாகும.

இவை யாவற்றையும் வெற்றிகொண்டு நிரந்தர சமாதானத்தை அடைய நாங்கள் திடமாக உறுதிகொள்வோம் - என்றுள்ளது.

# மேதினச் செய்திகள்

யாழ்ப்பாணம்,மே1

தமிழ் மக்களின் அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு எடுத்து முழங்கும் இன்றைய கூட்டு மேதினத்தில் பங்கேற்று மக்கள் தமது எழுச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்று அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி அழைப்பு விடுத்துள்ளார்.

மேதினத்தை ஒட்டி அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

பல வருடங்களுக்குப் பின்பு யாழ்ப்பாணத்தில் பாட்டாளி மக்கள், விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவின் தலைமையில் கோலாகலமாக தொழிலாளர் தினமாகிய மேதினத்தைக் கொண்டாடுகிறார்கள்.

கடந்த பல வருடங்களாக தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைகள் தீர்க்கப்படாது இழுத்தடிப்புச் செய்யப்பட்டு வந்த காரணத்தாலும், அமைதியின்மை இருந்தமையாலும் தமிழ்த் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளைப் பற்றியோ, பிரச்சினைகளைப பற்றியோ சிந்திக்க இயலாதவர்களாக இருந்தார்கள்.

தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தலைமையில் தமிழர் தாயகமாம் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அமைதியும், நிரந்தர சமாதானமும் ஏற்படும் என்ற நம்பிக்கை பிறந்திருக்கிறது. ஆகவே தமிழ்த் தொழிலாளர்களின் பிரச்சினைகள் தீர்ந்து, உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் புலிகளின் அரசியல் பிரிவு நடத்தும் இந்த மேதின விழாவில், பொங்கு தமிழ் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பித்தது போன்று மக்கள் யாவரும் கலந்துகொள்ள வேண்டும். - என்றுள்ளது.

### புளொட

"ஒடுக்கப்படும் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக அணிதிரளும் இன்றைய தினத்தில் ஏனைய இனங்களைப் போல் நாமும் கௌரவமுடன் சமத்துவமான இனமாக வாழ்வியல் உரிமைகளை வென்றெடுக்கும் போராட்ட தினமாகக் கொண்டாடுவோம்" என்று புளொட் அமைப்பின் மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"கடந்த கால போர்ச் சூழலில் வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துத் தொழிற்சாலைகளும் அழிக்கபட்டன. இதனால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். இன்று அத்தொழிலாளர்களின் வாழ்க்கை உயர்வுபெற ஒன்றிணைந்து போராடுவோம்" என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

### மொழிபெயர்ப்பாளர் பரீட்சை

மொழிபெயர்ப்பாளர் சேவையின் வகுப்பு Iஇற்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2001 (2002) எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சையில் தோற்றவுள்ள விண்ணப்பதாரிகள் தமது அனுமதி அட்டைகளை நாளை வியாழக்கிழமை பிற்பகல் தொடக்கம் வேம்படி மகளிர் கல்லூரியில் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

(க-10)

### இரத்தம் தேவை

யாழ்.வைத்தியசாலை இரத்த வங்கிக்கு 'ஏ' பொசிட்டிவ் (A+)இரத்தம் அவசரமாகத் தேவையாகவுள்ளது என்று இரத்தவங்கிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்த வகை இரத்தம் உள்ளோர் இரத்த வங்கிக்கு வந்து இரத்ததானம் செய்யும்படி அவர் கேட்டுள்ளார்.(உ-3)

### முல்லையிலிருந்து 3 நோயாளர் வந்தனர்

யாழ்ப்பாணம்,மே1

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் முல்லைத்தீவு ஆஸ்பத்திரியிலிருந்து மேலதிக சிகிச்சைக்காக மூன்று நோயாளர்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கு நேற்று அனுப்பப்பட்டனர்.

முன்னர் கிளிநொச்சி, முல்லைத்தீவு வைத்தியசாலைகளில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக நோயாளர்கள் யாழ்.ஆஸ்பத்திரிக்கே அனுப்பி வைக்கப்பட்டு வந்தனர்.

கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் குடாநாட்டுக்கும் வன்னிக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதால், நோயாளர்கள் வவுனியா, அநுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டு வந்தனர்.

ஏ-9 பாதை திறக்கப்பட்டதையடுத்து முதல் தடவையாக முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் இருந்து மூன்று நோயாளர்கள் நேற்று யாழ். ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

(உ-3-15)




யாழ்.கூட்டுறவுத் திணைக்களம் முன்பாக உதவிக் கணக்காய்வாளர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கியபடி மறியற் போராட்டத்தில் ஈடுபடும்போது எடுக்கப்பட்ட படம். (படம்: தேவராஜன்)

## கூட்டுறவுத் திணைக்கள அலுவலகம் முன்

# உதவிக் கணக்காய்வாளர்கள் நேற்று மறியற் போராட்டம்

யாழ்ப்பாணம்,மே1

தமது சேவைக்காலத்தைக் கவனத்தில் கொண்டு தமக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று கோரி கூட்டுறவுத் திணைக்கள உதவிக் கணக்காய்வாளர்கள் நேற்று மேற்கொண்ட மறியற் போராட்டத்தினால் கூட்டுறவுத் திணைக்களத்தின் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பித்தன.

நேற்றுக்காலை 8 மணியளவில் அப்பகுதியில் ஒன்றுகூடிய உதவிக் கணக்காய்வாளர்கள், பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய சுலோக அட்டைகளைத் தாங்கியவாறு மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் எவரும் உள்ளே செல்லமுடியாத நிலையில் அப்பகுதியில் சிறிது நேரம் காத்திருந்து விட்டு வீடுகளுக்குத் திரும்பினர்.

நண்பகல் 12 மணியளவில் அப்பகுதிக்கு வருகைதந்த யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் போராட்டத்தில் ஈடுபட்டவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்ததுடன் அவை குறித்து தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தனர்.

மேதினத்தையொட்டி இன்று போராட்டம் இடம்பெறாதெனவும் -

நாளை முதல் போராட்டம் தொடரும் என்றும் -

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

அதேசமயம் -

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள மேற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.முஹம்மதுடன் போராட்டக்காரர் கலந்துரையாடினர்.

தமது பிரச்சினைகள் தொடர்பாக விரிவான மகஜர் ஒன்றை அமைச்சரிடம் அவர்கள் சமர்ப்பித்தனர்.

சமபந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு ஆவனசெய்வதாக அமைச்சர் உறுதி அளித்தார்.

(உ-8-10-86-173)

# தொண்டர் ஆசிரியர்களும் இரண்டாம் நாளாக மறியல்!

யாழ்ப்பாணம்,மே1

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர் மற்றும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் மறியற் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது. இதன் காரணமாக யாழ்.மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை, யாழ்.வலயப் பணிமனை ஆகியவற்றின் செயற்பாடுகளும் ஸ்தம்பித்தன.

யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா ஆகியோர் மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

ஜேர்மன் நாட்டில் வாழ்கின்ற தமிழர்களின் நலன்களைப் பேணும் சட்டத்தரணி க.இராமச்சந்திரனும் போராட்டம் நடைபெற்ற இடத்துக்கு வருகைதந்து அதில் ஈடுபட்டவர்களின் பிரச்சினைகளைக் கேட்டறிந்து கொண்டார்.

இன்று மேதினத்தையொட்டி போராடடம் நடைபெறாது எனவும் -

மீண்டும் நாளை அது தொடரும் என்றும் - போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(உ-8-10-86)

# வவுனியாவில் சமாதானத்தை வலியுறுத்தும் மேதின நிகழ்ச்சி

வவுனியா,மே1

உலக தொழிலாளர் தினமான மேதினத்தை சமாதானம், இன ஒற்றுமை ஆகியவற்றினை வலியுறுத்தி குரல் கொடுக்கும் வகையில் வவுனியா நகரில் இன்று கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மன்னார் வீதி, யாழ் வீதி, ஹொரவப்பொத்தானை வீதி, பூந்தோட்ட வீதி, கண்டி வீதி ஆகியவற்றினூடாக மாலை 4மணிக்கு பேரணிகள் ஆரம்பமாகி மாலை 5மணிக்கு வவுனியா நகர சபை மைதானத்தை வந்தடையும்.

இதன் பின்னர் மாபெரும் மேதினக் கூட்டம் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் தொழிற்சங்க பிரமுகர்கள், வெகுஜன அமைப்பின் பிரதிநிதிகள், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியல் பிரிவினர் ஆகியோர் உரையாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பிலும் மேதினப் பேரணி

மட்டக்களப்பு,மே1

மட்டக்களப்பிலும் எழுச்சிபூர்வமாக மேதினப் பேரணி, கூட்டம் ஆகியவற்றை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் உள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் இருந்து எழுச்சிப் பேரணி ஆரம்பமாகும்.

மட்டக்களப்பு - கல்முனை பிரதான வீதி, பட்டிருப்புப்பாலம் ஆகியவை ஊடாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்லும் பேரணி, பழுகாமத்தை அடையும். அங்கு மேதினக் கூட்டம் இடம்பெறும்.

தொழிற் சங்கவாதி அமரர் கிருஷ்ணகுட்டி அரங்கில் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட துணை அரசியல் பொறுப்பாளர் துரை தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கரிகாலன் மற்றும் தொழிற் சங்கப் பிரமுகர்கள் உரையாற்ற விருக்கின்றனர். (உ-3-6)

# முசோலினி சுவரொட்டியால் இத்தாலியில் பரவிய அச்சம்!

ரோம்,மே.1

இத்தாலியத் தலைநகர் ரோமில் திடீரென்று பெருமளவில் ஒட்டப்பட்டிருந்த சர்வாதிகாரி முசோலினியின் படம் பொறித்த சுவரொட்டிகள் அங்கு தீவிர இனவாதம் மீண்டும் தலைதூக்கக்கூடும் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளன.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது ஜெர்மனிய சர்வாதிகாரி ஹிட்லருடன் கூட்டுச் சேர்ந்து உலகை ஆட்டிப் படைத்தவர் இத்தாலிய சர்வாதிகாரி பெனிடா முசோலினி. இறுதியில் எதிர்த்தரப்பினரால் அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். ஹிட்லரைப் போலவே முசோலினியும் பாஸிச இனவாதக் கொள்கையைக் கடைப்பிடிததவராவார்.

இந்த நிலையில் சமீபத்தில் ஒரு நாள் இரவோடிரவாக முசோலினியின் படம் பொறித்த சுவரொட்டிகள் ரோம் நகரம் முழுவதிலும் ஒட்டப்பட்டிருந்தன. அவற்றில், 'இன்று நான் இல்லை; ஆனால் என் கொள்கைகள் இருக்கின்றன' என்ற வாசகங்கள் அச்சிடப்பட்டிருந்தன.

இந்தச் சுவரொட்டிகளை உடனடியாக அகற்றுமாறு ரோம் நகர மேயர் வோல்டர் வெல்ட்ரோனி உத்தரவிட்டார். அதனையடுத்து அவை முற்றாக அகற்றப்பட்டன.

சுவரொட்டிகள் மறைந்தாலும் அவை இத்தாலிய அரசியல்வாதிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்திய அச்சம் அகலவில்லை. பல்வேறு நாடுகளைச் சேர்ந்தோரும், பல இனத்தோரும் குடியேறியுள்ள இத்தாலியில் முசோலினியின் இனவாதக் கொள்கை மீண்டும் செல்வாக்குப் பெறக்கூடும் என்றும் -

இதனால் இத்தாலியர் அல்லாதோர் மீதான வன்முறைகள் தலைதூக்கக்கூடும் என்றும் - அவர்கள் அஞ்சுகின்றனர்.

பிரெஞ்சு அதிபர் தேர்தலின் இரணடாம்கட்ட வாக்கெடுப்புக்கு இனவாதியாகக் கருதப்படும் ஜீன் மரிலீபென் தகுதி பெற்றிருப்பதற்கும், இந்த சுவரொட்டி விவகாரத்துக்கும் சந்தர்ப்பம் இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

(ஒ)

உலக அரங்கில்

# 'பர்பி' பொம்மையை உருவாக்கிய அமெரிக்க பெண்மணி காலமானார்!

லொஸ்ஏஞ்சல்ஸ்,மே1

உலகப் புகழ்பெற்ற 'பர்பி' பொம்மைகளை உருவாக்கிய ரூத் ஹேறண்ட்லர் என்ற அமெரிக்கப் பெண்மணி தனது 85ஆவது வயதில் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் புற்று நோயால் காலமானார்.

இவர் 1954ஆம் ஆண்டு 'பர்பி' பொம்மையை வடிவமைத்தார். 1959 ஆம் ஆண்டு அமெரிக்காவில் இடம்பெற்ற பொம்மைக் கண்காட்சியில் அறிமுகப்படுத்தப்பட்டபோது ஒரே ஆண்டில் 3 லட்சம் 'பர்பி' பொம்மைகள் விற்பனையாகிச் சாதனை படைத்தன. பின்னர் 150 நாடுகளில் 100 கோடி பொம்மைகள் விற்பனையாகின.


'பர்பி'யுடன் ரூத்

சிறிய இடுப்பும், நீலநிறக் கண்களுடனும் அழகிய கூந்தலுடனும உள்ள 'பர்பி' பொம்மைகள் விதம் விதமான உடைகளில் பெண்களையும், குழந்தைகளையும் கவர்வதால் தற்போதும் ஆண்டுக்கு 18 கோடி ரூபா அளவுக்கு விற்பனையாகின்றன.

அமெரிக்காவில் குடியேறிய போலந்துக் குடும்பத்தில் 10 ஆவது குழந்தையாகப் பிறந்த ரூத் தனது 20ஆவது வயதில் ஹேறண்ட்லரை மணந்தார். இவர்களது குடும்ப வாழ்க்கை ரூத்தின மரணம்வரை நீடித்தது. தனது மகள் பார்பராவின் நினைவாகவே தான் வடிவமைத்த பொம்மைக்கு 'பர்பி' என்று பெயரிட்டிருந்தார் ரூத்.

(ஒ)

## ஜெனின் அகதிமுகாம் விவகாரம்:

# ஐ.நா.விசாரணைக் குழுவினருக்கு இஸ்ரேலிய அமைச்சரவை தடை!

## இராணுவ நடவடிக்கையும் விஸ்தரிப்பு

லண்டன்,மே1

மேற்குக்கரை நகரான ஜெனினிலுள்ள பலஸ்தீன அகதிமுகாமுக்கு ஐ.நா.விசாரணைக் குழு செல்வதற்கு இஸ்ரேல் விதித்துள்ள தடையை மேலும் தொடர்வதென இஸ்ரேலிய அமைச்சரவை நேற்று தீர்மானித்தது.

ஜெனின் அகதிமுகாமில் பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தேடும் நடவடிக்கையை மேற்கொண்ட இஸ்ரேலியப் படையினர் போர்க் குற்றங்கள் இழைத்துள்ளதாகக் கூறப்படுவது குறித்து உண்மை நிலையைக் கண்டறிய ஐ.நா. குழுவினர் ஜெனின் அகதிமுகாமுக்கு கடந்த சனிக்கிழமை செல்லவிருந்தனர். ஆனால், இஸ்ரேல் இதற்கு அனுமதியளிக்க மறுத்து விட்டது. அமெரிக்காவின் நியூயோர்க் நகரின் இஸ்ரேல் மற்றும் ஐ.நா. பிரதிநிதிகள் இடையே நடந்த பேச்சில் இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை. இதனைத் தொடர்ந்தே மேற்படி தனது முடிவை இஸ்ரேலிய அமைச்சரவை அறிவித்தது.

இது ஒருபுறமிருக்க, பெத்தலகேம் அருகே உள்ள ஷவர்வா என்ற பலஸ்தீனக் கிராமத்துக்குள் நேற்று இஸ்ரேலியப் படைகள் புகுந்தன. டாங்கிகள், கவசவாகனங்கள் சகிதம் இந்தக் கிராமத்துக்குள் நுழைந்த இஸ்ரேலிய இராணுவம் தம்மால் தேடப்படும் பலஸ்தீனர்கள் என்று கூறிப் பலரைக் கைதுசெய்ததாகக் கூறப்படுகிறது. ஜெனின் அருகே உள்ள கிராமம் ஒன்றுக்குள்ளும் இஸ்ரேலியப் படையினர் நுழைந்துள்ளனர்.

ஹெப்ரோனின் மத்திய அலியாஹ மருத்துவமனையில் பலஸ்தீனத் தீவிரவாதிகள் சிகிச்சை பெற்றுவருவதாகக் கிடைத்த தகவலையடுத்து அங்கும் இஸ்ரேலியப் படையினர் தேடுதல் நடத்தியுள்ளனர். ஆயினும், மருத்துவமனையில் எவரும் கைது செய்யப்படவில்லை.


இஸ்ரேலிய சிப்பாயின் பிடியில் பலஸ்தீனர் ஒருவர்

(ஒ)

# அமெ. தூதரகம் அருகே குண்டு ஒன்று வெடித்தது

## ஏமனில் சம்பவம்

சானா,மே.1

மத்திய கிழக்கு நாடான ஏமனில உள்ள அமெரிக்கத் தூதரகம் அருகே நேற்றுமுன்தினம் வெடிகுண்டொன்று வெடித்தது. குண்டுவெடிப்பைத் தொடர்ந்து அப்பகுதியில் துப்பாக்கிச் சூடு நடந்ததாக நேரில் கண்டவாகள் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை.

பின்லேடனின் அல்கெய்டா அமைப்பினரைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 173 பேரை ஏமன் அரசு கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளது. இவர்களை ஒருமாதகாலத்துக்குள் விடுதலை செய்யாவிட்டால் பழிக்குப்பழி வாங்கப் போவதாக அல்கெய்டா அமைப்பு ஒருமாதம் முன்பாக எச்சரிக்கை விடுத்திருந்தது.

இந்த நிலையில் ஏமன் தலைநகர் சானாவில் உள்ள அமெரிக்கத் தூதரகம் ஒரு வாரகால விடுமுறையின் பின்னர் திறக்கப்பட்ட அன்று இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் நடந்துள்ளது.

ஏற்கனவே ஏமனில் அமெரிக்க நிலைகளை இலக்குவைத்து நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல்களில பலத்த சேதங்கள் ஏற்பட்டமை குறிப பிடத்தக்கது.

(ஒ)

# டானியல் பேர்ல் கொலை விசாரணை பாதுகாப்பான இடத்துக்கு மாற்றம்

கராச்சி,மே1

அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்ல் கொலைவழக்கு குறித்த விசாரணையை பாதுகாப்பான வேறொரு இடத்துக்கு மாற்றுவதற்கு பாகிஸ்தானிய உயர்நீதிமன்றம் இணங்கியுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரால், சாட்சிகளும், வழக்குத் தொடர்பவர்களும் நேரடியாகவும் அச்சுறுத்தப்படுவதாகவும் -

அதனால் தமது உயிர்களுக்கு ஆபத்து நேருமென்று அஞ்சுவதாகவும் -

விசாரணையை மேற்கொள்ளும் நீதிபதியால் அதனைத் தடுக்க விரும்பவில்லை அல்லது முடியவில்லை என்பதால் நீதிபதியை மாற்ற வேண்டும் என்றும் - அரசுதரப்புச் சட்டத்தரணிகள் கோரியிருந்தனர்.

இந்தக் கோரிக்கைகளை ஏற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் கராச்சி மத்திய சிறையில் இடம்பெற்றுவந்த விசாரணையை ஹைதராபாத் நகருக்கு மாற்ற உத்தரவிட்டார்.

அத்துடன் நாளைமறுதினம் புதிய இடத்தில் இடம்பெறவுள்ள விசாரணைக்கு வேறொரு நீதிபதியை நியமித்தார்.

அமெரிக்காவின் 'வோல் ஸ்ரீட் ஜேர்னல்' பத்திரிகையின் செய்தியாளர் டானியல் பேர்லை கடத்திச் சென்று கொலை செய்தது தொடர்பாக அஹமட் ஓமர் சயீட் ஷா என்பவர் உட்பட 4 பேர் மீது பாகிஸ்தானில் சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகின்றது.

(ஒ)

## கிழக்கு ஆப்கானிஸ்தானிய மலைப்பகுதியில்

# அல்கெய்டா போராளிகளுடன் கூட்டுப் படையினர் மோதல்!

காபூல்,மே1

ஆப்கானிஸ்தானின் கிழக்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் இடம்பெற்ற மோதல்களில் அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்த 4பேரை தாம் கொன்றதாக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் தெரிவித்தனர்.


ஆப்கானில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப் படையினர்

கோஸ்ட் நகரில் இடம்பெற்ற இந்த மோதல்கள் குறித்து ஆப்கானில் உள்ள அமெரிக்கப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் பிராங்ளின் எல் கஹேறன்பெக் கூறுகையில்,

பாகிஸ்தானிய எல்லையிலிருந்து 2 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கட்டடத் தொகுதி மற்றும் மலைக் குகை ஆகியவற்றில் அல்கெய்டா அமைப்பைச் சேர்ந்தோர் திரண்டிருந்ததாகவும் -

இரகசியத் தகவலையடுத்து அப்பகுதிக்கு விரைந்த கூட்டுப்படையினருடன் அல்கெய்டாவினர் துப்பாக்கிச் சமரில் ஈடுபட்டதாகவும் -

அப்போது இரு போராளிகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும் - தெரிவித்தார்.

இந்த மோதலைத் தொடர்ந்து மேலதிகப் படையினர் ஹெலிகள் மூலம் அப்பகுதியில் தரையிறக்கப்பட்டனர். அவர்கள் தேடுதல் நடத்திய போதும், அல்கெய்டாவினர் அங்கிருந்து தப்பிவிட்டிருந்ததால் எவரும் பிடிபடவில்லை.

இதேவேளை, அப்பகுதியில் தாம் நேற்று அதிகாலை தேடுதல் மேற்கொண்டபோது அங்கிருந்து தப்பியோட முயற்சித்த அல்கெய்டா அமைப்பினர் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் அமெரிக்கப் படைத் தளபதி தெரிவித்தார்.

ஆனால் கொல்லப்பட்ட இருவரும் அப்பாவிப் பொதுமக்கள் என்று சுயாதீனச் செய்திகள் தெரிவித்தன.

அல்கெய்டாவினர் பதுங்கியிருந்ததாகக் கூறப்படும் கட்டடத் தொகுதியில் ஆயுதங்களும், வெடிபொருள்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மோதல் நடந்த பகுதி கூட்டுப்படைகளின் தீவிர கண்காணிப்பில் இருந்த பிரதேசமாகும். அத்தகைய இடத்தில் அல்கெய்டாவினர் திரண்டிருந்தமை, சீரான காலநிலை ஏற்பட்டுள்ள அடுத்து வரும் மாதங்களில் அவர்கள் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ளக்கூடும் என்ற அச்சத்தை கூட்டுப்படையினருக்கு ஏற்படுத்தியருப்பதாகக் கூறப்படுகிறது.

(ஒ)

# கட்டாயத் துறவறம் குறித்து கத்தோலிக்க மதகுரு விசனம்

செளபெளலோ,மே1

கத்தோலிக்க மதகுருமார் திருமணம் புரியாமல் கட்டாயம் துறவறம் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுவது குறித்து பிரேசிலுக்கான பாப்பரசரின் பிரதிநிதி போலோ வெறிஸ்ரோ ஆண்ஸ் விசனம் தெரிவித்துள்ளார்.

'ஒகுளோப்' என்ற பிரேசிலிய நாளிதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

'நான் விவாகமாகாது தனியே வாழ்க்கை நடத்துகிறேன். இது எனது சுயவிருப்பம்.அத்துடன் இதில் மனமகிழ்வும் அடைகிறேன். ஆயினும் இன்றும் கத்தோலிக்கம் துறவுத் தன்மையை வலியுறுத்துகிறது. இக் கொள்கை பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் தலைமைத்துவம் இருக்கும்வரை மாறாது. கட்டாயத்துறவு ஒருபோதும் புனித விவிலியத்தில் வலியுறுத்தப்படவில்லை. ஆயினும் அதைக் கடைப்பிடிப்பதில் திருச்சபை விடாப்பிடியாக இருப்பது அங்கத்தவர்களின் துரதிஷ்டமே. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் பாப்பரசரான புனித பேதுரு குடும்பஸ்தர் என்பதை சுட்டிக்காட்டிய அவர் இது தனது சொந்த அபிப்பிராயம் என்றும் கூறினார்.

பிரேசிலில் உள்ள கத்தோலிக்க மதகுருமார்மீதும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

### மியான்மரில் ஆங்சாங் சூகி விரைவில் விடுதலை?

யாங்கூன்,மே1

மியான்மரில் 18 மாதகாலமாக வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவி ஆங்சாங் சூகி விரைவில் விடுதலையாவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவ ஆட்சியாளருக்கும் சூகிக்கும் இடையிலான தொடர்பு அதிகாரி பிரிகேடியர் ஜெனரல் தான் டுன் நேற்று சூகியின் வீட்டுக்கு நேரில் சென்று சந்தித்தமை அவரது விடுதலையை உறுதிப்படுத்தும் நடவடிக்கை என்றே கருதப்படுகிறது.

(ஒ)

# அழகிய அலிகள்




இப்போதெல்லாம் அழகி போட்டிகள் என்பது எல்லா நாடுகளிலும் தவிர்க்க முடியாதவை ஆகிவிட்டன. இனிவரும் காலங்களில் அழகிப் போட்டிகள் நடத்தாத நாடுகள் ஒருமாதியாகப் பார்க்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

எதற்கெல்லாம் அழகிப் போட்டிகள் நடத்துகின்றார்கள் என்பதில்தான் அதன் வளர்ச்சி...? உள்ளது. அண்மையில் தாய்லாந்தில் ஓர் அழகிப் போட்டி நடந்தது. வழமையானவற்றிலும் இது சற்று வித்தியாசமானது.

'அலி'களுக்கான அழகிப் போட்டிதான் அது! உளகளாவிய ரீதியிலான 'அழகிய அலி' போட்டிதான் தாய்லாந்தில் நடந்தது. அதாவது ஆணாக இருந்து பெண்ணாக மாறிய அலிகளுக்கான போட்டி 'மிஸ் டிபானி' என்ற பெயரில் நடத்தப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து அலிகள் இந்தப் போட்டியில் கலந்துகொண்டனர்.


இந்திய அலிகள்



இதில் 26 வயதான தன்யா (படத்தில் நடுவில் இருப்பவர்)வெற்றி பெற்றார்.

இந்தப் போட்டிகள் தந்த ஊக்கத்தில் அண்மையில் இந்தியாவிலும் அலிகளுக்கான அழகிப்போட்டி போபால் நகரில் நடந்தது. இதில் 25க்கும் மேற்பட்ட அலிகள் கலந்துகொண்டனர். அலிகளின் நடனம், பாட்டு என்று நிகழ்வு ஒரே அமர்க்களம்தான்.

தயாரிப்பு:
கனிமொழி

# திரீ இன் வண்



யாழ்ப்பாணத்துக்கடைகளில் இப்போது ரூ இன் வண (2in1) பொருள்களைத் தாராளமாகக் காணமுடிகின்றது. ஒரே பொருளில் இரு வேறு வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் போது அதனை இவ்வாறு அழைக்கின்றோம்.

இதுபோன்ற திரீ இன் வண் (3in1) மொபைல்போன் (கையடக்கத் தொலைபேசி) ஒன்று தற்போது சந்தைக்கு வந்துள்ளது.

'பென்டன்ட் போன்' என்பது அதன் பெயர். இந்த போன் மூலம் தொலைபேசி வசதி, வானொலி வசதி (எவ்.எம். றேடியோ), படம் எடுக்கும் வசதி (கமெரா) என்ற மூன்று வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

# அட! அப்பாடியா!!

## விண்வெளியில் உல்லாசம்



விண்வெளிக்கு உல்லாசப் பயணிகளை அனுப்பும் திட்டத்தை ரஷ்யா ஆரம்பித்தாலும் ஆரம்பித்தது உலக கோடீஸ்வரர்கள் மத்தியில் விண்ணுக்குப் போகப் பலத்த போட்டி.

உலகின் முதலாவது விண்வெளி சுற்றுலாப் பயணி டெனிஸ் டிட்டோ விண்ணுக்குப் போய் பத்திரமாகத் திரும்பி வந்ததால் இப்போது உலகக் கோடீஸ்வரர்களின் ஆசை யெல்லாம் ஒரு முறையாவது வானத்துக் குப் போய் விட வேண்டும் என்பதுதான்.

அந்த வரிசையில் இரண்டாவது விண்வெளி சுற்றுலாப்பயணியான ஷட்டில் வோர்த் கடந்த வாரம் விண்ணுக் குப் பயணமானார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த கோடீஸ்வரரான இவர் 8 நாள்கள் விண்ணில் தங்கியிருப்பார். இதற்காக இவர் செலவிட்ட தொகை 2 கோடி அமெரிக்க டொலர்கள். நம் நாட்டு மதிப்பில் சுமார் 190 கோடி ரூபாய். இவ்வளவு பணத்தை நீராய் இறைத்து ஓர் உல்லாசம் தேவைதானா என்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் கோடீஸ்வரர்களுக்கு இதுவெல்லாம் ஒரு பொருட்டல்ல.

இதோ! அடுத்த பயணியும் விண்ணுக்குச் செல்லத் தயார். அவரும் தென்னாபிரிக்கக்காரர்தான். இவர் மட்டுமல்ல இவரைப்போல் பயணத்துக்குப் பதிந்துவிட்டுக் காத்திருப்போர் ஏராளம்.


சர்வதேச விண் தளம்

## செல்லப் பன்றிகள்


வீட்டு சமயலறையில்

பன்றிகள்! யாழ்ப்பாணம் புல்லுக்குளம் பகுதியில் சில திரிந்துகொண்டிருந்தன. இப்போது காணவில்லை. பிடித்து அடித்துத் தின்றிருப்பர். அதற்குத்தான் அங்கே ஆள்கள் இருக்கிறார்களே.

பன்றிகள் என்றால் அழுக்கானவை அருவருக்கத்தக்கவை என்றுதானே நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால், ஆஸ்திரேலியாவில் உள்ள நீல் தம்பதியருக்கு இவைதான் செல்லப்பிள்ளைகள்.

அவர்கள் வீட்டில் லூஸி, லில்லி, ஒலிவர் என்று மூன்று பன்றிகள் இருக்கின்றன. சர்வ சுதந்திரமாய் அவை வீட்டுக்குள் வளைய வருகின்றன. தமது எஜமானி அம்மாவுடன் நொறுக்குத் தீனி உண்டவாறு ரி.வி. பார்க்கின்றன. அவர்களது கட்டிலில் ஏறி ஹாயாகப் படுத்துத் தூங்குகின்றன; துள்ளிக் குதிக்கின்றன.


கட்டிலில்

இதனைப் பார்த்து அயலில் உள்ளவர்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பன்றிகளால் ஏற்படும் துர்நாற்றத்தை சகித்துக்கொள்ள முடியவில்லை என்று வழக்குப் போட்டார்கள்.

வழக்கை விசாரித்தார் நீதிபதி. சொல்லிவிட்டார்! நீங்கள் கேட்பது போன்றெல்லாம் தீர்ப்புக்கூறமுடியாது. பன்றிகளை வீட்டில் வளர்க்கலாம் என்று. நீல் மற்றும் - பார்க்ஸ் தம்பதியினருக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி தங்கள் பன்றிகளுடன் கொஞ்சிக் குலவ இனித் தடையேதுமில்லை என்கிறார்கள் அவர்கள்.

## குழந்தை அழுதால் நல்லது

குழந்தைகள் கத்தி அழுதால் அவற்றுக்கு பசிக்கின்றது அல்லது ஏதாவது வருத்தம் என்றுதான் நாம் நினைத்துக் கொண்டிருகின்றோம். ஆனால் குழந்தைகளின் நலன் மற்றும் அவற்றின் வளர்ச்சிக்காக குழந்தைகளைக் கத்தி அழவிட்டு ஒரு போட்டியே நடக்கிறது ஜப்பானில்.



பாரம்பரியமான போட்டியான இதற்கு 'நக்கிசுமோ' என்று பெயர். டோக்கியோவில் உள்ள சென்சோஜி என்ற ஆலயத்தில் கடந்த 27ஆம் திகதி இந்தப் போட்டி நடந்தது.



ஜப்பானிய சுமோ வீரர்கள் குழந்தைகளை உயரத் தூக்கிப் பிடித்திருப்பார்கள். அப்போது எந்தக் குழந்தை வேகமாகவும் பெரிதாகவும் கத்துகிறதோ அதுவே வெற்றி பெற்றதாகும்.

2001ஆம் ஆண்டு மே 2ஆம் திகதி பிறந்த ரியோடரோ நூகாரியோ என்ற குழந்தை சுமோ வீரர் ஒருவர் கையில் ஏந்தியிருக்கையில் அழுவதையும் இரு சுமோ வீரர்களின் கைகளில் இரு குழந்தைகள் நேருக்குநேர் பார்த்துக்கொண்டு அழுவதையும் இங்கு படங்களில் காணலாம்.

என்ன உலகமடா இது!

# தொலைவில் இருந்தபடி ஒரு சத்திரசிகிச்சை

பூமிப்பந்து இப்போது சுருங்கிவிட்டது. தகவல் தொழில்நுட்பம் விஞ்ஞான வளர்ச்சியும் இதற்கு வழிசமைத்துள்ளது.

உலகின் ஒரு மூலையில் இருந்து இன்னொரு மூலைக்குச் சில மணி நேரங்களில் சென்றுவிட ஜெட் விமானங்கள். தகவல்களை சில நிமிடங்களில் 'டெலிவரி' செய்துவிட ஈ-மெயில். தகவல்களையும் செய்திகளையும் அறிய 24 மணிநேர தொலைக்காட்சி, வானொலி என்று உலகம் வெகுவாகச் சுருங்கிவிட்டது.



கணனித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும் இதற்கு ஒரு மிக முக்கிய காரணம். தகவல் தொழில்நுட்பத்தில் கணனியின் பங்கு அளப்பரியது.

தகவல் தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சியால் ஏற்பட்ட நன்மைகளில் தொலைதூர மருத்துவம் எனப்படும் Tele Medicine என்பதும் ஒன்றாகும். தற்போது இந்தத்துறை வேகமாக முன்னேறி வருகின்றது.


இதன் இன்னொரு பரிணாமமாக தொலைதூர சத்திரசிகிச்சையும் (Tele Surgery) வளர்ந்து வருகின்றது.

இந்த தொலைதூர மருத்துவம் என்பது என்ன?


நீங்கள் இலங்கையில் இருக்கிறீர்கள். உங்களுக்கு சிகிச்சை அளிக்கக்கூடிய வைத்திய நிபுணர் அமெரிக்காவில் இருக்கிறார். அவர் இங்கெல்லாம் வந்து வைத்தியம் செய்யத் தயாராக இல்லை.

இப்போது உங்களுக்கு உதவக்கூடிய ஒன்று இந்த தொலைதூர மருத்துவம்.

உங்கள் நோய் பற்றிய குறிப்புகளை அமெரிக்காவில் உள்ள மருத்துவருக்கு முதலில் அனுப்பி வைக்கவேண்டும்.


பிரேம்

அவற்றை அவர் ஆராய்ந்த பின்னர் இலங்கையில் இருக்கும் உங்களுடன் 'வீடியோ கொன்பரன்ஸிங்' முறைமூலம் அவர் உரையாடி உங்கள் நோய்பற்றித் தனக்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்வார். (வீடியோ கொன்பரன்ஸிங் என்பது உங்களிடம் திரையுடன் கூடிய ஒரு தொலைபேசி வசதி இருக்கும் அவ்வாறான ஒரு வசதி அமெரிக்காவில் உள்ள டாக்டரிடமும் இருக்கும். உங்களது திரையில் நீங்கள் டாக்டரையும் டாக்டரின் திரையில் உங்களையும் பார்க்க முடியும். ஒவ்வொரு சிறிய அசைவும் மிகத் துல்லியமாகத் தெரியும். நீங்களும் டாக்டரும் நேர் எதிரில் இருந்து பேசிக் கொள்வது போன்று இருக்கும்)




தகவல்களைப் பெற்றபின்னர் உங்களது நோய்க்கான மருத்துவ ஆலோசனைகளை இலங்கையில் இருக்கும் உங்கள் மருத்துவருக்கு அமெரிக்க டாக்டர் வழங்குவார். அதனடிப்படையில் உங்களுக்கு இங்கு சிகிச்சை நடைபெறும். அமெரிக்க டாக்டர் 'வீடியோ கொன்பரன்ஸிங்' மூலம் அதனை மேற்பார்வை செய்துகொள்வார். அவ்வப்போது தனது ஆலோசனைகளையும் வழங்குவார்.

இதனையே தொலைதூர மருத்துவம் (Tele Medicine) என்கிறோம். இதன்மூலம் ஒரு சிறந்த மருத்துவரின் ஆலோசனைகளையும் சிகிச்சையையும் உலகம் முழுவதும் இருப்பவர்கள் பெற்றுக்கொள்ளும்நிலை ஏற்பட்டுள்ளது.

எமது அண்டை நாடான இந்தியாவரை அந்த வசதிகள் வந்துவிட்டன.

இது போன்றதே தொலைதூர சத்திர சிகிச்சையுமாகும். ஆனால், இதில் ஒரு சிறிய மாற்றம். இந்த சத்திரசிகிச்சைக்கு மருத்துவர்களுடன் ஒரு ரோபோவும் தேவைப்படுகின்றது.



சத்திர சிகிச்சையில் ரோபோக்களைப் பயன்படுத்த நீண்ட காலமாகவே முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. மனித உடம்பின் சில பகுதிகளில் டாக்டர்கள் தங்கள் கைகளை நுழைத்து சத்திர சிகிச்சை மேற்கொள்வது கடினம். அவ்வாறான சமயங்களில்

(10ஆம் பக்கம் பார்க்க)

உதயன்

## எழுச்சி பொங்க மேதினம்!

உலகத் தொழிலாளர் தினம் இன்று.

ஒடுக்கப்பட்டு கொத்தடிமைகளாக விளங்கிய தொழிலாளர்கள், தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக - சுரண்டலுக்கு எதிராக - ஒன்றுபட்டு உணர்வுடன் எழுந்ததைக் குறிக்கும் நாள் இது.

உலகின் முதுகெலும்பாக - உந்துசக்தியாக - விளங்கும் தொழிலாளர்கள் தமது உரிமைகளைப் பெறுவதற்காகவும், தாம அநீதியான முறையில் அடக்கப்படுவதற்கு எதிராகவும் அவ்வப்போது போராட வேண்டியிருந்தது; போராடவேண்டியுள்ளது.

தினசரி பதினெட்டு முதல் இருபது மணிநேரம் கொத்தடிமைகளாகப் பணிபுரிய வைக்கப்பட்ட தொழிலாளர்கள் அந்த அடக்குமுறைக்கு எதிராக 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே ஒன்றிணைந்து போராட ஆரம்பித்துவிட்டனர்.

அவர்களது உரிமைக்கான இந்தப் போராட்டம் பல களங்களைக் கண்டது; முதலாளித்துவத்தின் அடக்குமுறைகளை எதிர்கொண்டது.

1884 ஒக்ரோபர் 7ஆம் திகதி சிக்காக்கோ நகரில் அமெரிக்கத் தொழிலாளர் சம்மேளனம், மேதினம் பற்றிய முன்மொழிவை முன்வைத்தது. 1889ஆம் ஆண்டு பாரிஸில் கூடிய சர்வதேச சமதர்ம மாநாடு மேதினத்தைப் பிரகடனப்படுத்தியது. அன்று முதல் இந்தத் தொழிலாளர் நாள் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டு வருகின்றது.

அதிகார வர்க்கத்தின் அடக்குமுறைக்கு எதிரான தொழிலாளரின் போராட்டத்தைப் பிரதிபலிக்கும் நாளாக மட்டும் மேதினம் அமைந்துவிடவில்லை.

அடக்கப்பட்டு விடுதலைக்காகப் போராடும் மக்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் நாளாகவும் இது அனுஷ்டிக்கப்படுகின்றது. அதனால்தான் விடுதலைப் போராட்டங்கள் நடைபெறும் பிரதேசங்களில் தொழிலாளர் தினம் வீறுகொண்ட எழுச்சியுடன் கொண்டாடப்படுகின்றது.

அந்தவகையில் ஈழத்தமிழர்களைப் பொறுத்தவரை, தங்களது விடுதலை வேட்கையை வெளிப்படுத்துவதற்குக் கிடைத்திருக்கும் மற்றோர் அரிய திருநாள் இது.

கடந்த காலங்களை விட இன்றைய மேதினம் நமக்கு வித்தியாசமானது.

நீண்ட பல வருடங்களாக யுத்தக் கெடுபிடி என்ற அடக்குமுறைக்கு மத்தியில் இந்தத் தொழிலாளர் தினத்தை நாம் கொண்டாட வேண்டியவர்களாக இருந்தோம்.

ஆனால், இம்முறை நிலைமை மாறிவிட்டது. அமைதிக்கான வாய்ப்பும் நம்பிக்கை ஒளிக்கீற்றும் தென்படத் தொடங்கியுள்ள பின்னணியில் மேதினம் பிறக்கின்றது.

ஈழத்தமிழரை காலங்காலமாக அடக்கி வைத்தது சிங்களப் பேரினவாதம். அதற்கு கூஜா தூக்கும் சில சக்திகள் இங்கே நிலைகொண்டு, தொழிலாளர்களின் ஆபத்பாந்தவர்கள் தாங்கள்தாம் என்று பறைசாற்றிக் கொண்டு, இங்கு மேதினப் பேரணிகளை நடத்தி, துள்ளல் இசை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து, கூட்டத்தைத் திரட்டிய அவலத்தைக் கடந்த வருடங்களில் பார்த்திருந்தோம்.

இம்முறை மேதினம் வித்தியாசமான முறையில் ஏற்பாடாகியுள்ளது.

தொழிலாளர் தினத்தின் ஊடாக தமது இன விடுதலை முழக்கத்தைச் செய்வதற்கு குடாநாட்டு மக்களுக்கு ஒரு வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இந்தப் பின்னணியில், எழுச்சியுடன் மேதினத்தில் ஒன்றுகூட அவர்கள் தயாராகி நிற்கின்றனர்.

தேசிய இனம், மரபுவழித்தாயகம், சுயநிர்ணய உரிமை ஆகிய தமது இன மக்களின் அபிலாஷைகளை உலகறிய முழங்கும் வகையில் எழுச்சியுடன் கூட்டு மேதினம் இன்று நடக்கின்றது. எழுச்சிப் பேரணியுடன் மேதினக் கூட்டத்தில் மக்கள் வெள்ளமெனத் திரள்வர்.

அதன்மூலம் தமது அபிலாஷைகளையும் விருப்பத்தையும் அவர்கள் வெளிப்படுத்துவர்.

'விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கு!', 'காலங்காலமாகப் புரையோடிப் போயிருக்கும் இனப் பிரச்சினைக்கு அமைதி வழியில் நிரந்தரத்தீர்வு காண்பதற்காக தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசு!' - போன்ற கோரிக்கைகளை இந்தத் தொழிலாளர் தின நிகழ்வு ஊடாகவும் அரசுக்கு வலியுறுத்தி முன்வைப்பார்கள் நமது மக்கள்.

அமைதிக்கான ஏக்கமும் தேடலுக்கான முயற்சியும் தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் நடக்கும் மேதின நிகழ்வுகளில் மட்டும் இம்முறை பிரதிபலிக்கப்போவதில்லை. தெற்கிலும் அது பிரதிபலிக்கும்.

ஆனால், தெற்கில் அது இரண்டுபட்டிருப்பது கண்கூடு.

அமைதியை நாடுபவர்கள் - சமாதான விரும்பிகள் - தற்போதைய சமாதான முயற்சிகளை வரவேற்கும் எழுச்சியை இந்த மேதினத்தில் வெளிப்படுத்துவார்கள்.

ஆனால், சிங்களப் பேரினவாத, அடக்குமுறைக் கொள்கையில் ஊறித் திளைத்த ஒரு சிறு பகுதியினர், இனவாதம் முழங்கும் மேதினக் கூட்டங்களையும் பேரணிகளையும் தெற்கில் நடத்தத் தவறப்போவதில்லை.

சிங்கள மக்களில் பெரும்பான்மையானோர் அமைதித்தீர்வில் அதிக ஆர்வமும் ஆவலும் கொண்டிருப்பதால் இனவாதம் கிளப்பும் இந்த சக்திகளின் மேதின அறைகூவல் அடங்கிப் போவது திண்ணம்.

# அபிவிருத்திக்கு மட்டுமன்றி சமாதானத்துக்கும் வர்த்தக சமூகத்தின் பங்களிப்பு அவசியம்

## கலந்துரையாடலில் அமைச்சர் மொஹமட்

யாழ்ப்பாணம்

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் வர்த்தக சமூகத்தின் பங்கு அளப்பரியது. அவ்வாறே நாட்டின் சமாதானத்துக்கும் வர்த்தக சமூகத்தினரும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

யாழ்ப்பாணம் வணிகர் கழக அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வணிகர் கழகப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது மேற்குப் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.மொஹமட் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் அங்கு தெரிவித்ததாவது:

நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதில் அரசதரப்பும் விடுதலைப்புலிகள் அமைப்பும் நூற்றுக்கு நூறு வீதம் ஆர்வமுடன் செயற்பட்டு வருகின்றன. தாய்லாந்து நாட்டில் விரைவில் பேச்சுக்கள் ஆரம்பமாகவுள்ளன. புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் விடுதலைப் புலிகள் மிகவும் ஒத்துழைப்பை நல்கி வருகின்றார்கள்.

இந்த விடயத்தில் பொதுமக்களும் தமது ஒத்துழைப்பை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் வழங்கவேண்டும். நிரந்தர சமாதானத்துக்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது. யுத்தத்தின் காரணமாகக் குடாநாட்டில் அழிவுற்ற கட்டடங்களைப் புனரமைப்பதற்கு என்னால் முடிந்த உதவிகளைச் செய்வேன்.

அண்மையில் திறக்கப்பட்ட ஏ-9 பாதையூடான பயணமும் அப்பாதையூடாகப் பொருள்களை எடுத்து வருவதில் உள்ள தடங்கல்கள் மற்றும் சிரமங்கள் பற்றியும் என்னிடம் தெரிவிக்கீர்கள். இது தொடர்பான விடயங்கள் பற்றி எழுத்து [illegible]க்குத் தந்தால் பிரதமரிடம் தெரியப்படுத்துவேன் [illegible]ார்.

வணிகர் கழகத்தின் செயலாளர் கே.நித்தியானந்தன் தமது உரையில் தெரிவித்ததாவது:-

கடந்த காலங்களில் அமைச்சர்கள் இங்கு வந்தபொழுது வர்த்தகப் பிரமுகர்கள் கூட்டம் எமது அலுவலகத்தில் அலை மோதியது. ஆனால், இன்று மிகவும் சொற்ப அளவிலான வர்த்தகப் பிரமுகர்களே இங்கு வருகை தந்துள்ளனர். முன்பு வருகை தந்த அமைச்சர்கள் அனைவரும் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமைதான் அதற்குக் காரணமாகும்.

குடாநாட்டில் உள்ள [illegible]களின் அன்றாட பிரச்சினைகள் இன்றுவரை முற்றுமுழுதாகத் தீர்ந்தபாடில்லை. மீன்பிடித்தடை முற்றாக நீக்கப்படவில்லை. வர்த்தகர்களின் பிரச்சினைகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. இவற்றையெல்லாம் நீக்குவதற்கு சிரேஷ்ட அமைச்சர் என்ற வகையிலும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த அமைச்சர் என்ற வகையிலும் நீங்கள் முழுமனதுடன் [illegible] படவேண்டும். எமது மக்களின் நிரந்தர, நிலையான சகஜ வாழ்வுக்கு நீங்கள் அங்கம் வகிக்கும் அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

இந்தக் கலந்துலையாடலில் யாழ்.அரசாங்க அதிபர், செயலக அதிகாரிகள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(க-10)

## அரசு - புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்

# ஜேர்மனியில் இலங்கையருக்கு அரசியல் புகலிடம் நிராகரிப்பு

கொழும்பு,மே1

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் அரசியல் புகலிடம் கோரும் இலங்கையரின் விடயத்தில் ஜேர்மன் அரசு கடுமையான நடைமுறைகளைப் பின்பற்றத் தொடங்கியிருக்கிறது.

ஏராளமான வெளிநாட்டவர்கள் தினமும் ஜேர்மனிக்குள் சட்டவிரோதமாகப் புகுந்து அரசியல் புகலிடம் கோருகின்றனர்.

அவர்களின் விண்ணப்பங்களை எல்லாம் கருணையுடன் ஜேர்மன் அரசு நோக்குவதாகக் கூறப்படுகிறது. ஆனால் இலங்கையர் விடயத்தில் கடுமையான நடைமுறைகளே பின்பற்றப்படுகின்றன.

ஜேர்மனிய வெளிநாட்டு அமைச்சினால் மேற்கொள்ளப்படும் அரசியல் திறனாய்வு அறிக்கை ஒன்றை அடுத்தே இலங்கையர் விடயத்தில் இந்தக் கடுமையான நடவடிக்கை அமுல்படுத்தப்படுகிறது.

இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதரகத்தினால் இந்தத் திறனாய்வு அறிக்கை அனுப்பிவைக்கப்பட்டது. இதன்படி தற்போது ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரும் இலங்கையரின் விசாரணைகள் இரண்டுவாரங்களில் பூர்த்திசெய்யப்படுகின்றன. அதன் பின்பு ஏறத்தாழ அனைவருக்கும் விண்ணப்ப நிராகரிப்புக் கடிதம் வழங்கப்பட்டு விடுகின்றது.

இலங்கையரைப் பொறுத்தவரை விண்ணப்பிக்கும் ஆயிரம் பேரில் ஒருவர் என்ற விகிதத்திலேயே விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு அனைவரும் இலங்கைக்கு அல்லது அவர்கள் வந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு வருகின்றனர்.

விண்ணப்பம் நிராகரிக்கப்படும் போது ஜேர்மன் அரசினால் வழங்கப்படும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது விடுதலைப் புலிகளுக்கும் - ஸ்ரீலங்கா அரசுக்கும் இடையே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. படையினரின் கெடுபிடிகள் அங்கு குறைந்துவிட்டன. எனவே, குறிப்பிட்ட விண்ணப்பதாரி ஜேர்மனியில் அரசியல் தஞ்சம்கோரும் தேவை இல்லாமல் போகிறது. குறிப்பிட்ட நபருக்கு விடுதலைப் புலிகளினாலோ அல்லது இலங்கை அரசினாலோ ஆபத்துக்கள் இருக்குமாயின் அது பற்றி இலங்கையில் இயங்கிவரும் ஐரோப்பிய கண்காணிப்புக் குழுவிடம் முறையிடமுடியும்."

- இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தகவல்களை ஜேர்மனியில் உள்ள சட்ட ஆலோசகரும் அரச மொழிபெயர்ப்பாளருமான எம். ரி.எஸ்.இராமச்சந்திரன் தெரிவித்திருக்கிறார்.

தற்போது இலங்கையில் உள்ள சூழ்நிலை பற்றித் திறனாய்வு செய்ய அவர் இலங்கை வந்திருக்கிறார். யாழ்ப்பாணம் உட்பட வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு அவர் விஜயம் செய்கிறார்.

"யுத்தநிறுத்தம் மற்றும் ஒப்பந்த மீறல் சம்பவங்களை ஆராய்ந்து திறனாய்வு அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவிருக்கிறேன். அறிக்கையை ஜேர்மன் அரசிடம் வழங்கி உண்மை நிலையை விளக்கப்போகிறேன்.

"இலங்கை அகதிகளை நாட்டை விட்டுத் திருப்பி அனுப்புவதைத் தடுக்கவும், முன்னறிவித்தல் இல்லாமல் கைதுசெய்து திருப்பி அனுப்புவது, குடும்பங்களைப் பிரித்து அனுப்புவது. கல்வி கற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களைப் பாதியில் பிடித்து அனுப்புவது போன்ற நடவடிக்கைகளை எதிர்த்து ஜேர்மனியில் உள்ள கால்சூவர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யவிருக்கிறேன்.

தற்போது ஜேர்மனியில் திருப்பியனுப்புவதற்காக சுமார் 200 இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். 5,000 பேர் வரை திரும்பத் தயாராக இருக்கின்றனர்."



- இவ்வாறு அவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

அரசு - புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தினை அடுத்து விடுதலைப் புலிகள் மற்றும் அவர்களுக்கு ஆதரவான இயக்கங்களைத் தவிர்த்து ஏனைய மாற்று இயக்கங்களில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் பலர் அதிக எண்ணிக்கையில் வெளிநாடுகளில் தஞ்சம் கோர முயன்று வருகின்றனர்.

அவர்களில் கணிசமானோர ஜேர்மனை நாடி வருவதாகவும் கூறப்படுகின்றது.

- இவ்வாறு அவசரப்பட்டு அரசியல் தஞ்சம் கோர முயல்வோரைப் போலி வெளிநாட்டுப் பயண முகவர்கள் ஏமாற்றிக்கூட்டிச் சென்று, நடுவழியில் தவிக்கவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைத் தமிழ் அகதிகள் குறித்தும் அரசியல் தஞ்சம் கோருவோர் குறித்தும் ஜேர்மன் அரசியல் நீதிமன்றத்தில் தாங்கள் தாக்கல் செய்யவிருக்கும் வழக்குத் தொடர்பாக சார்பான தீர்ப்பு வரும்வரை இலங்கைத் தமிழ் அகதிகள் ஜேர்மனுக்கு உரிய பத்திரங்கள் இன்றிப் படையெடுப்பதைத் தவிர்க்கவேண்டும் எனவும் -

போலி முகவர்களின் வலையில் சிக்கி, பல லட்சம் ரூபா பணத்தை இழந்து, வெறும் கையுடன் நாடு திரும்புவதைத் தவிர்ப்பதற்காக எச்சரிக்கையுடன் செயற்படும் படியும் - இராமச்சந்திரன் கோரியுள்ளார்.

(உ)

### நாளை

சித்திரை 19
வியாழக்கிழமை
(02.05.2002)
திதி : ஷஷ்டி
பின்னிரவு 3.30 வரை.
நட்சத்திரம் : பூராடம்
காலை 6.18 வரை
சுபநேரம் : 7.27 - 8.57
ராகுகாலம்: 1.27 - 2.57
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

பெண், ஆடவனுக்குக் காட்டக் கூடிய ஆழ்ந்த அன்பு அவன் தன் கடமையைச் செய்வதற்கு உதவியாக நிற்பதே!

## தென்மராட்சி மண்ணில் 50 வருட சேவை:

# ஆயுர்வேத வைத்தியர்கள் இருவருக்கு தேசிய விருது

தென்மராட்சி,மே1

தென்மராட்சிப் பிரதேசத்தில் சுமார் ஐம்பது ஆண்டுகள் ஆயுர்வேத வைத்திய சேவையில் ஈடுபட்ட இரு வைத்தியர்கள் சுகாதார, போசணை மற்றும் நலனோம்புகை அமைச்சினால் 'சஹஸ்ராபிஷேக வைத்திய சிகாமணி" விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளனர்.

டாக்டர் பே.பிலிப்ஸ், டாக்டர் வ.சின்னப்பு ஆகிய இரு சுதேச மருத்துவர்களே கௌரவிக்கப்படவுள்ளவர்களாவர்.

கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு மின்வலு, சக்தி அமைச்சர் கரு ஜெயசூரிய தலைமையில் நடைபெறும் இந்தத் தேசிய விழாவில் சுகாதார, போசணை மற்றும் நலனோம்புகை அமைச்சர் பி.பி.தயாரத்ன விருதுகளை வழங்குவதுடன், தங்கப்பதக்கம் சூட்டி கௌரவிக்கவுள்ளதாக அமைச்சின் மேலதிக செயலாளர் பீ.புத்திக விஜேரத்ன அறிவித்துள்ளார்.

(க-117)

# பாடசாலை பஸ்சேவைகளை நடத்துக! தென்மராட்சி பெற்றோர் கோரிக்கை

தென்மராட்சி,மே1

சாவகச்சேரிப் பகுதியில் நேற்றுமுன்தினம் தொடக்கம் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டதையடுத்து வலிகாமம், வடமராட்சி ஆகிய பகுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நலன்கருதி பாடசாலை பஸ்சேவைகளை ஆரம்பிக்குமாறு பெற்றோர் வ.பி.போ.சபை பொது முகாமையாளரைக் கோரியுள்ளனர்.

பருத்தித்துறையிலிருந்து கனகன் புளியடி, நுணாவில் ஊடாக நடத்தப்படும் பாடசாலை பஸ் சேவையை சாவகச்சேரி மகளிர் கல்லூரி வரை நடத்துமாறு கல்லூரி அதிபர் கோரியுள்ளதுடன் சங்கானையிலிருந்து சாவகச்சேரி வரையிலான பஸ்சேவையையும் மாணவர் நலன்கருதி நடத்துமாறு கோரியுள்ளார்.

(க-117)

காடழித்தல் தீமை, பருவமழை பொய்க்கும்
பலவிதத்தில் இதன் விளைவு நம்மைப் பாதிக்கும்
மரம் தறித்தல் தீமை இதை உணருவீர்
நல்ல மரங்களையே நட்டு நீங்கள் மகிழ்வீர்.

(C21416)

# நெஞ்சத்து நினைவுகளில் ஓராண்டு



தோற்றம்
28 - 10 - 1929

மறைவு
11 - 05 - 2001

## திருமதி சோமசுந்தரம் இராசம்மா

திதி: 01.05.2002

அன்பினால் எம்மை வளர்த்து
பண்பினை நிலை நாட்டி
பாசத்தினை வளர்த்துவிட்டு
பாதியிலே பிரிந்துவிட்ட - அம்மாவே!
இன்பமுடன் வாழ இனிதே இருந்தாய்
ஈற்றிலே எம்மைத் தனியாக்கிவிட்டாய்!
ஆண்டொன்று இன்று முடிவுற்றாலும் - அம்மா
ஆறாது எந்நாளும் உங்கள் நினைவு!

உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்:
குடும்பத்தினர்.

அரசடி வீதி,
இருபாலை.

(சி-21953)

# 31 ஆவது நாள் நினைவஞ்சலியும்
## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



பிறப்பு
01 - 12 - 1944

இறப்பு
31 - 03 - 2002

## அமரர் வல்லிபுரம் கணபதிப்பிள்ளை

பாசத்துடன் பழகி நேசத்துடன் வாழ்ந்த
அன்பு அப்பாவே! பண்பும் அன்பும் கலந்து
அரவணைத்து, ஆதரித்து எமை வளர்த்தீர்!
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (01. 05. 2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

யாக்கரு வீதி, கரவெட்டி கிழக்கு. (3299)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில்
20 ❖ 11 ❖ 1964

விண்ணில்
01 ❖ 05 ❖ 2001

## அமரர் இரத்தினம் ரவீந்திரன்

"உனையிழந்து ஓராண்டு சென்றிடினும் மாறாத
நினைவுகளுடன் எம் மனங்களில் நீ உள்ளாய்"
ஓராண்டு நினைவுதினத்தில் உம் ஆத்மசாந்திக்காய்
இறைவனிடம் இறைஞ்சுகின்றோம்.

55, புதுசிவன் வீதி,
நல்லூர். (3291) - குடும்பத்தினர்.

## 'ஜெயா'வுக்கு எதிராக திருமலையில் பிரகடனம்

திருகோணமலை, மே1

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைக் கைதுசெய்து இந்திய அரசிடம் ஒப்படைகக வேணடும என்று தமிழக சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட தீமானத்தை முதல்வர் ஜெயலலிதா வாபஸ் பெறவேண்டுமெனக் கோரி திருமலையில் பிரகடனம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மேற்படி தீமானத்தைக் கண்டித்து பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருமலையில் ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது தெரிந்ததே. இந்த ஊர்வலத்தின் இறுதியில் சம்பந்தப்பட்ட பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது. (எ)

## பாடசாலைகள் பல மீள இயங்குகின்றன

தென்மராட்சி, மே1

வடமராட்சி, வலிகாமம் ஆகிய பகுதிகளில் இயங்கிய தென்மராட்சி வலயத்தைச் சேர்ந்த பெரும்பாலான பாடசாலைகள் நேற்றுமுன்தினம் திஙகட்கிழமை முதல் சொந்த இடங்களில் மீள இயங்கத் தொடங்கியுள்ளன.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் கணிசமான மாணவர்களும் ஆசிரியர்களும் சமுகமளித்திருந்ததைக் காணமுடிந்தது.

பாடசாலைகள் சேதமடைந்துள்ளதால் தற்காலிக வகுப்பறைத்தொகுதிகள் அமைக்கும்பணி பாடசாலைகளில் நடைபெற்று வருகின்றது. (க-117)

## மரங்கள் விற்பதில் மக்கள் ஆர்வம்

தென்மராட்சி,மே1

தென்மராட்சிப் பகுதியில் மரங்களை விற்பனை செய்வதில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

யாழ் - கண்டி வீதியில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதையடுத்து மரங்கள், பலகைகள், தீராந்திகள் விறகுகள் லொறிகளில் கொண்டுவரப்பட்டால் இங்கு மரங்களின் விலைகள் குறைந்து விடலாமென எண்ணியே மக்கள் வேம்பு, நாவல், மா, புளி போன்ற பெரிய மரங்களை விற்பனை செய்துவருவதையும், மரங்கள் தறிகப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதையும் காண முடிகிறது. (க-117)

## தென்மராட்சியில் எலும்புக் கூடுகள் தொடர்ச்சியாக மீட்பு

தென்மராட்சிப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்து வரும் பகுதிகளில் மனித எலும்புக்கூடுகளும் அவற்றின் எச்சங்களும் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் காணியொன்றினைத் துப்புரவு செய்த வேளையில் மனித எலும்புகள் காணப்பட்டன. இது குறித்து பொலீஸாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஏழு மனித எலும்புக் கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அண்மையில் கற்குழிப் பகுதியில் ஆலயம் ஒன்றில் ஒரு எலும்புக் கூடும், தச்சன்தோப்பு பகுதியில் மூன்று எலும்புக்கூடுகளும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(க-117)

## தீவகக் கல்வி வலயம்
# அதிபர் பதவி வெற்றிடங்கள்

தீவகக் கல்வி வலயத்தில் பின்வரும் பாடசாலைகளில் அதிபர் பதவி வெற்றிடமாகவுள்ளது.

1. யா/வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி ம.ம.வி. - 1ஏபி வேலணை
2. யா/சின்னமடு றோ.க.த.க. பாடசாலை - III சரவணை

விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்கள் தமது விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து 15.05.2002இற்கு முன்னர் தமது வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்
தீவகம், வேலணை.

2002.04.29 (C-21975)

# மணிவிழா தம்பதிகளை வாழ்த்துகிறோம்



28.04.2002இல் ஜேர்மன் நகரில்
மணிவிழாக் கொண்டாடிய சுன்னாகம்
ஸ்ரீ கதிரமலைச் சிவன் கோயில்
பிரதமகுருக்கள்
"பிரதிஷ்டா சிரோன்மணி"
சிவஸ்ரீ நா.சோமாஸ்கந்தக்குருக்கள்
ஸ்ரீமதி காஞ்சனா
தம்பதியினர் சீருஞ்சிறப்புடன் பல்லாண்டு
காலம் பேரும் புகழும் பெற்று, பெருவாழ்வு
வாழ்ந்திட கதிரமலைச்சிவன் பாதம்
பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

- சுன்னாகம் வரிசைப்புல மக்கள்
கதிரைமலைச்சிவன் கோயில்
3ஆம் நாள் மாலை நேர உபயகாரர்.

(C-21968)

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து
## 01-05-2002

HAPPY BIRTHDAY



## செல்வி வி.டிலக்ஷனா

யாழ்ப்பாணம், இல. 93/21, இந்து மகளிர் ஒழுங்கை, கந்தர்மடத்தில் வசிக்கும் **திரு.திருமதி விக்கிரமச்சந்திரன் - தவமலர்** தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி டிலக்ஷனா தனது முதலாவது பிறந்தநாளை இன்று (01-05-2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

டிலக்ஷனாவை நயினை ஸ்ரீ நாகபூஷனி அம்மன் அருள் பெற்று, பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ்கவென அப்பா, அம்மா, உற்றார், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவரும் அன்புடன் வாழ்த்துகின்றார்கள்.

*93/21, இந்து மகளிர் ஒழுங்கை,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (3296)

திரு.திருமதி விக்கிரமச்சந்திரன் - தவமலர்
தம்பதிகள்.

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



(3298)

## 01-05-2002

## செல்வன்
## சதீஸ்குமார் பிரவீன்

குப்பிளான் தெற்கு, குப்பிளானில் வசிக்கும
திரு.திருமதி சதீஸ்குமார் - தயாவதி
தம்பதிகளின்
*செல்வப்புதல்வன் செல்வன்*
*பிரவீன்*

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (01-05-2002) புதன்கிழமை அவரது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

பிரவீன் அவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மாமார், அம்மப்பாமார், அத்தைமார், மாமாமார், சித்தி, மச்சான்மார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் திருவருள்மிகு நல்லைக் கந்தன் அருளால் சகல செல்வங்களும் பெற்று, பல்லாண்டு காலம் நலமாக வாழ வாழ்த்துகின்றார்கள்.

திரு.திருமதி சதீஸ்குமார் - தயாவதி
தம்பதிகள்.

*குப்பிளான்.*

# அடக்கப்பட்ட தொழிலாளரின் எழுச்சி தினம் ஒடுக்கப்பட்ட மக்களின் நாளாகப் பரிணாமம்

**மே**தினம் - வியர்வை சிந்தி உழைக்கும் தொழிலாளர்களின் உரிமைகள் மறுக்கப்படும் போதும், அடிப்படை உரிமைகள் அங்கீகரிக்கப்படாத போதும் அவர்களது உரிமைக்காகக் குரல் எழுப்பும் தினமாகும் இன்று ஒரு சமூகத்தின் மீது மற்றொரு சமூகமோ, ஓர் இனத்தின் மது மற்றோர் இனமோ, ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடோ அடக்குமுறைகளைத் திணிக்கும்போது அவற்றை எதிர்த்துக் குரலெழுப்பும் நாளாகவும் மேதினம் மேம்படுத்தப்பட்டுள்ளது.

உழைக்கும் வர்க்கத்தின் உன்னத தினமாகிய இந்நாள் தொழிற் சங்க நடவடிக்கையோடே ஆரம்பமானது.

### அடக்குமுறை அம்பலமானது

1806ஆம் ஆண்டு பிடெல்பியா நகரத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் ஒன்றில் ஈடுபட்டு, தமது கோரிக்கைகளை முன்வைத்தார்கள். அங்கு அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டது. தலைமை தாங்கியவர்கள் மீது பொய் வழக்குகள் போடப்பட்டன. இதிலிருந்தே தொழிலாளர்கள் மீதான அடக்குமுறை பாணி அம்பலத்திற்கு வந்தது.

1827இல் பிடெல்பிய கட்டடத் தொழிலாளர் 10 மணி நேர வேலைக் கோரிக்கையை முன்வைத்தனர். 18-20 மணி நேரம் வேலை செய்த

## உரிமைக் குரல்கள் இணைந்து ஒலிக்கும் மே முதலாம் நாள்

நியூயோர்க் நகர ரொட்டித் தொழிலாளர்களும் கட்டடத் தொழிலாளரின் கோரிக்கைக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதில் அவர்கள் வெற்றியும் பெற்றனர்.

இதனைத் தொடர்ந்தே பல நாடுகளிலும் தொழிலாளர்கள் எட்டுமணி வேலை நேரக் கோரிக்கையை முன்வைத்து போராட்டம் நடத்தினர்.

1866 இல் தேசிய கைத்தொழில் சங்கத்தின் முதலாவது மாநாட்டில் "அமெரிக்கா முழுமைக்கும் எட்டு மணி நேரவேலை சட்டமாக்கப்பட வேண்டும். இதனாலேயே முதலாளித்துவ அடிமைத்தனத்திலிருந்து உழைக்கும் வர்க்கத்தை விடுவிக்க முடியும். இதற்காக ஒன்று திரண்டு பலத்துடன் போராடுவோம்" என்று பிரகடனப்படுத்தப்பட்டது.

எட்டுமணிநேர வேலை என்ற கோரிக்கை முன்வைப்போடு ஆரம்பமான எழுச்சியே பெரும் இயக்கமாக உருவெடுத்தது. ஆகவே 1884 இல் மேதினத்தை முழுமையாகப் பிரசவிப்புச் செய்தது. அடங்கமறுத்து, திமிறி எழுபவர்களை அடக்குமுறையாளர்கள் ஒடுக்கமுனைவது இயல்பே.

அமெரிக்காவில் 1866இல் நடைபெற்ற ஊர்வலத்தில் நடந்த நிகழ்வுகள், 1875இல் பென்சில்வேனியாவில் நடந்த போராட்டத்தில் சுரங்கத் தொழிலாளரின் படுகொலைகள், பால்டிமோரில் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டவர் மீது நடத்தப்பட்ட கொடூரத்தாக்குதல், பொஸ்ரன் நகரில் மேதினத்தன்று நடந்த ஊர்வலத்தில் துப்பாக்கிச் சூடுகள் என அடக்குமுறை வரலாறு விரிந்து செல்கிறது.

இத்தகைய கொடூரங்களின் பின்னணியில் 2ஆவது சர்வதேச காங்கிரஸின் மாநாடு 1889இல் பாரீஸ் நகரத்தில் நடைபெற்றது.

'மே முதல் நாள் என்பது உலகத தொழிலாளர் தங்கள் அரசியல் தொழிற் சங்கங்களின் கீழ் முக்கிய கோரிக்கையாக எட்டுமணி நேர வேலை நாளுக்கு குரல் கொடுக்க வேண்டிய தினம்' என்று அறிவிக்கப்பட்டது. இந்நடவடிக்கைக்கு அத்திவாரமாக அமைந்தது 1884 ஒக்ரோபர் 7இல் சிக்காக்கோவில் அமெரிக்க தொழிலாளர் சம்மேளனம் மேற்கொண்ட போராட்டம் ஆகும்.

### ஒடுக்கப்பட்ட இனம்

உலகில் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் மலிந்து போயுள்ள நிலையில் அவை முதலாளித்துவத்திற்கெதிரானவையாக பெரும்பாலும் அமைந்தபோதும், இனவிடுதலை தொடர்பாக - அடக்கப்பட்ட இனத்தின் கொந்தளிப்பாக - கட்டுமீறும் எடுத்துக்காட்டுகளும் உள்ளன.

அடக்குமுறைக்குள்ளான இனம் வெகுண்டெழுவதும், போராடுவதும், உரிமைகளை மீட்டெடுக்கத் துடிப்பதும், அடிமைத்தளையிலிருந்து விடுபட ஏங்குவதும் தவிர்க்க முடியாததே.

நியாயமான போராட்டம் ஒன்று நீண்டகாலம் எடுப்பினும் அதன் இலக்கை அடைந்தே தீரும் என்பதற்கு விடுதலையடைந்த பல இனங்கள் சாட்சி.

இலங்கை - மூவினங்களைக் கொண்ட முத்தாக வர்ணிக்கப்பட்ட நாடு. இங்கு திராவிடரே பாரம்பரிய இனமென்பதற்கு வரலாறே ஆதாரம்.



விஜயனின் வழிவந்து பல்கிப் பெருகி பெரும்பான்மையினராக மாறிவிட்டவர்கள் சிறுபான்மை இனத்தில் ஆதிக்கம் செலுத்தத் தலைப்பட்டனர்.

தொழிலாளர் தினம் என்ற போர்வையில் இன்று தமது அரசியல் நடவடிக்கைகளை மேம்படுத்த விளையும் - இலங்கைத் தீவின் தொழிலாளரின் ஒற்றுமைக்கும் உரிமைகளுக்கும் குரல்கொடுப்பதாகக் கூறும் பல கட்சிகள், தொழிற்சங்கங்கள் போன்றவை 1956ஆம் ஆண்டின் தனிச்சிங்களம் (சிங்களம் மட்டும்) சட்டத்துடன் எழுந்த இனவாத புயலில் சிக்கிக்கொண்டவையே.

இனவாதக் கருத்துக்களை மனதில் சுமந்து கொண்ட இவை, சிறுபான்மைத் தமிழ் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பாகப் பாரபட்சம் காட்டியே தமது நடவடிக்கைகளை முன்னெடுத்தன.

இத்தகைய கட்சிகள் செய்த தவறினால் அதுவரை அவர்கள் பின்பற்றி வந்த பொதுவுடைமைக் கோட்பாடுகள் அர்த்தமற்றதாகிப்போயின.

### பொதுவுடைமை

இந்த நாட்டில் சிங்களப் பேரினவாதிகள் தமிழ் சிறுபான்மையினரின் அனைத்து விடயங்களிலும் செல்வாக்குச் செலுத்தி, ஒவ்வொரு துறைகளிலும் தமிழரை உரிமையற்றவர்களாக்கிய போதெல்லாம், பொதுவுடைமைவாதிகள் என மார்தட்டிக் கொண்டவர்கள் அதனைத் தட்டிக் கேட்கவுமில்லை, எதிராகக் குரல் கொடுக்கவுமில்லை.

தமது உரிமைகளைத் தாமே வென்றெடுக்க முடிவுசெய்த தமிழ் தொழிலாளர்கள் போராட்டம் நடத்தத் தீர்மானித்தனர். இதற்கமையவே 1960களில் மொழிவழித் தொழிற் சங்கங்கள் அமைத்து தமிழர் தம் உரிமைகளைக் கோரினர். தொழிலாளர், தொழில்சார் நடவடிக்கைகளில் காட்டப்பட்ட பாரபட்சம் போலவே அரசியலிலும் ஜனநாயகம் பிழைத்த காரணத்தால் தமிழ் அரசியல் கட்சிகள் ஏமாற்றப்பட்டன; தமிழ் இனத்தின் உரிமைகள் மறுக்கப்பட்டன. இதனால் சிறுபான்மைத் தமிழ்ச் சமூகம் வீறு கொண்டது. "நாம் பிரிவோம், சுயாட்சி அமைப்போம்" என்ற கோஷம் எழுந்தது.

நாடு சுதந்திரமடைந்து பல தசாப்தங்களைத் தாண்டிய பின்னரும் சிறுபான்மையினரை அடக்கியாளும் எண்ணங்கொண்டு செயற்பட்ட வேளையில், சிங்கள அரசியலாளர்கள் உலகின் அரசியல் மாற்றங்களை அவதானித்த பின்னரும் தம் பேரினவாதப்போக்கை மாற்றிக் கொள்ள முனையாத சூழ்நிலையில் ஆயுதப் புரட்சி வெடித்தது - தொடர்ந்து வளர்ந்தது.

### திசை மாறிய போராட்டம்

ஆயுதப் போராட்டத்தின் பின்னால அடக்குமுறைக்குள்ளான சமூகம் திரண்டபோதும் அவை வெவ்வேறு மூலைகளில் இருந்தே திரண்டன. இது பேரினவாத அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட முறியடிப்பு நடவடிக்கைக்குச் சாதகமாயிற்று.

அடக்கப்பட்ட இனத்தின் விடுதலையை வென்றெடுக்கவென பயணத்தை ஆரம்பித்தவர்கள் நிலை தவறி, வழிதவறிச் செல்ல ஆரம்பித்தனர். இது அற்ப சலுகைகளுக்காக அவர்களை திசை திருப்பவும் வழிகோலியது. பதவிகள், பட்டங்களுக்காக எடுத்துக்கொண்ட பாதையை மாற்றிக்கொண்டார்கள். அத்தகையவர்களால் விடுதலைப் பாதையை விசுவாசித்து நடந்தவர்களுக்கும் மாசுகள் படிந்தன.

தனி நாடு காணப் புறப்பட்ட தமிழர்கள் இன்று தனி மாகாணம் கிடைக்குமா? என்று ஏங்கும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலேயே மாற்று நடவடிக்கைக்கு முயலவேண்டும். இல்லையேல் ஓர் இனத்தை அழிவுக்கு இட்டுச் சென்றவர்களென வரலாறு எம்மைச் சொல்லும்' என்ற கருத்து முன்வைக்கப்படும் நிலை உருவானது.

அடக்கப்பட்ட சமூக விழிப்புணர்வு குறைந்து, அடங்கிப்போகும் நிலைக்கு தமிழ்ச் சமூகம் 1995இன் பின் தள்ளப்படும் நிலை ஏற்பட்டது. அடக்கப்பட்ட இனம் விலங்குடைத்து மீளும் என்ற நம்பிக்கை மக்களிடம் சிதறிப்போனது.

### பிரகாசன்

ஆயுதமுனை மிரட்டல்களும் கருத்துச் சுதந்திரத் தடைகளும் ஜனநாயக விரோத அடக்கு முறைகளும், தமிழ் பிரதேசங்களின் திட்டமிட்ட குடியேற்றங்களும் மலிந்துபோயின. சுதந்திரமான முறையில் மக்களின் குரல் ஓங்கி ஒலிக்க தடை ஏற்பட்டது. கடந்த சில ஆண்டுகளில் மேதினங்கள் அரசியல்வாதிகளின் பிரசார மேடைகளாகின. உணர்வுபூர்வமற்ற, வெற்றுக் கோஷங்களுக்கான களங்களும் ஆகின.

ஆனால் இன்று மக்கள் விழித்துக கொண்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலும இம்முறை மேதினம் சுதந்திரமான முறையில், நியாயமான கோரிக்கைகளுடன்...., பெரும்பான்மையினரிடம் துணிவாக உரிமைகளைக் கேட்கும் நிலையோடு இந்த மேதினத்தைச் சந்திக்கின்றனர் ஈழத்தமிழர்கள் அதற்குப் பொருத்தமான வழிகாட்டிகளோடும்.

இதனால் உலகெங்கும் மேதினம கொண்டாடும் தொழிலாளர் வர்க்கத்தினரதும், அடக்குமுறைக்குட்பட்ட மக்களினதும் குரல்களோடு தமிழ் மக்களின் குரலும் இம்முறை சேர்ந்து கேட்கும்.

## மேதினியில் உயர்ந்த நாள்

### உழைப்பவர்க்கே சொந்தமென்போம்

*களைத்துச் சோர்வதும்*
*கால் வயிற்றுக்கு கஞ்சி உண்பதுவுமாய்*
*இளைத்துப் போவதேன்*
*உழைத்து வாழ்பவர் வர்க்கம்*
*ஆளை விழுங்கும் முதலாளி வர்க்கம்*
*அற்றுப்போக உரத்துக் கூவிடுவோம்*
*உழைத்து வாழ்பவர்க்கே*
*இம் மாநிலம் சொந்தமென்று*

இதயநிலா
*நெற்கொழு.*

### ஓயாத அலையாகி உயர்ந்தவா!

வியர்வையினால் வியந்துலகம்
உயர்வடைய உறுதிகொண்டு
துயர் நீக்க துணிவோடு
ஓயாத அலையாகி எழுந்தவா!

நேற்று...
உன் முன்னோர் கிளந்தெழுந்து
உரிமைக்காய் கண்ணெதிரே
உயிர்விட்டுப் பிரசவித்த
உழைத்தவர் எம்(மே) தினத்தில்

உன்....
இடர் நீக்கி இன்புற்று
அடக்குமுறை அழித்தொழித்து
முடங்காது மூச் செடுத்து
மடங்காது எழுந்து நில்!

இனி...
கள மெல்லாம் கவிபாடும்
உளமெல்லாம் இசைமீட்டும்
வளமான வாழ்வோடு
இளநாடு உருவாகும்.

பிரகாசன்
*கீழ்க்கருணையூர்.*



### தமிழர் மே நாள் - 2002

செங்கொடியில் புலி பறந்திட
செந்தமிழன் விழி சிவந்திட
எங்கள் தாயக மே நாள்
ஏருழவர் தாகம் தீர்க்கும்

மூன்று தமிழும் நான்காக மாறிட
முளைக்கின்ற கனனியை மழலையும் இயக்கிட
தோன்றும் இந்த மே நாள்
தொழிலாளர் தாகம் தீர்க்கும்

இறைமையுடன் தமிழர் உரிமை மகிழ்ந்திட
இல்லாமை தமிழ் நிலத்தில் மறைந்திட
திரை கடலெங்கும் வள்ளங்கள் ஓடிட
திரை நீக்கும் மே நாள், சிவக்க வேண்டும்

அடிமை நிலை, வறுமை நிலை சிதைந்திட
ஆணவம் வெளிவேசம் அழிந்திட
பொறியியல் நதிகள் தமிழர் பூமியில் பாய்ந்திட
புரட்சிகர மேதினம் புன்னகைக்க வேண்டும்

- தமிழீழக்கவிராயர் -

### ஆயிரம் உரிமை மீட்ட 'மே' நாள் வாழ்க!

ஏதினி அடிமை வர்க்கம்?
எனக்குரல் உயர்த்தி வந்த
'மேதினம்' வாழ்க! மண்ணில்
மேலோர் கீழாரென
ஆதிக்கம் செய்து வந்த
ஆணவம் அழிந்த தெந்நாள்?
மேதினி போற்றி வாழ்த்தும்
'மே' நாளே அந்நாள்

வியர்வையின் துளிகளே! உம்
விழா நாளே மேநாள் கைகள்
உயர்வினை உரத்துக் கூறும்
ஒப்பற்ற நாளே இந்நாள்
அயர்வின்றி உழைப்போனுக்கும்
ஆயிரம் உரிமை மீட்ட
உயர்வான 'மேல்நாள் மேநாள்'
ஒப்பிலா அந்நாள் வாழ்க!

மதுரகவி
காரை. எம்.பி. அருளானந்தன்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## காணவில்லை

56C 73491 என்னும் இலக்கம் உடைய லுமாலா சைக்கிள் (28.04.2002) அன்று கொக்குவில் பகுதியில் இரவு 7.30 மணியளவில் தவறுதலாக கைமாறப்பட்டுவிட்டது. எடுத்துச் சென்றவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும். S.சிவலிங்கம், No.55, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் (3314)

## விற்பனைக்கு

மருந்துக் கடைக்குப் பாவித்த கண்ணாடி அலுமாரிகள் இரண்டும், காட்சி அலுமாரிகள் (Show Case) இரண்டும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: வ.பழனிவேல், ராஜ் மஹால், பருத்தித்துறை வீதி, வல்வெட்டித்துறை (சந்திக்கு அண்மையில்). (3292)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: 19,முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(3293)

சுவைமிக்க சேலான் இனNo-1 புறொயிலர் இறைச்சிக் கோழிகள் உயிருடன் விற்பனைக்கு உண்டு. சுத்தம் செய்தல் இலவசம். வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி, கட்டப்பிராய்.

(3315)

## வகுப்புகள்

Maths, English, O/L A,B,C பெறுபேறடைய ஆண்டு 9,10 ஆங்கிலம் விசேடமாக A/L, G.A.Q. கற்பிக்கப்படும். B.Sc. (Cey.) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (3212)

## தவில் வித்துவானுக்கு கௌரவம்

யாழ்.வண்ணை ஸ்ரீ காமாக்ஷி சனசமூக நிலையத்தினர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆலய வீதியில நிலைய முன்றிலில் தவில் வித்துவான் கே.கணேசபிள்ளை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்திப், பூமாலை அணிந்து, பாமாலை பாடி, கௌரவஞ் செய்தனர். இராமாயணம் தொடர் சொற்பொழிவாற்றிய கு.பாலசண்முகன் அவர்களுக்கு "சிவநெறித்திலகம்" எனும் விருது வழங்கிக் கௌரவஞ் செய்தனர்.

நீதிவான் இ.த.விக்னராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சமய அறிவுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். (க)

## மீசாலைப் பகுதிக்கு மின்சாரம்!

தென்மராட்சி,மே1

மீசாலைப் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு அடுத்த வாரம் முதல் மின்சாரம் வழங்க ஏற்பாடு நடைபெற்றுவருகின்றது. அதற்கான ஜெனரேற்றர் புத்தூர்ச் சந்தியில் செயறபடவுள்ளது.

இந்த ஜெனரேற்றர் மீசாலை - புத்தூர் சந்தியில் உள்ள இலங்கை மின்சார சபை சாவகச்சேரி அலுவலகத்திற்கு சேர்ந்துள்ளது.

இதேவேளை -

கடந்த இரண்டு வருடங்களாக மக்கள் இடம்பெயர்ந்துள்ள போதிலும் இக் காலப்பகுதிக்கு சேவைக் கட்டணமாக ரூபா 600 (24x25.00) செலுத்துமாறு மின்சாரசபையினால் மின் பாவனையாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (க-117)

## காணவில்லை

வட்டு.இந்துக் கல்லூரி உயர்தர வகுப்பு கலைப்பிரிவு (2003) மாணவனான செல்வன் இரத்தினம் கஜேந்திரன் (ராசா) வயது 21 என்பவர் 27.04.2002 சனிக்கிழமை காலை 10 மணிக்கு தனியார் கல்வி நிலையத்திற்கு சென்றது முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும்.

இரத்தினம் தங்கம்மா
வட்டு. கிழக்கு,
சித்தன்கேணி. (3323)

# யாழ்நகரில் கலாசாரக் காண்பியம்

# ஜயலத்தின் காதில் பொலீஸ் அதிகாரி 'கிசுகிசுத்த' அந்த ரகசியம் என்ன?

கடந்த மாதம் 13 ஆம் திகதி யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில சுவர்ணவாஹினி ஒளிபரப்பு நிறுவனத்தினால் புதுவருடக் கலாசாரக காண்பியம் நடத்தப்பட்டது. அந்த நிகழ்ச்சியில் புனர்வாழ்வு மற்றும் மீளக் குடியமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவும் பங்குபற்றினார். அமைச்சர் தொடர்பான சுவையான நிகழ்ச்சி ஒன்றை 'லங்காதீப' வார இதழ் வெளியிட்டுள்ளது.

அதன் விவரத்தை இங்கு தருகிறோம்.

யாழ்.மத்திய கல்லூரி மைதானததில் நடைபெற்ற கலாசார நிகழ்ச்சி நேரடியாக ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. அந்த நிகழ்ச்சியை தென் பகுதி மக்கள் மிகவும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர்.

அமைச்சர் ஜயலத் நிகழ்ச்சி மேடையில் பிரமுகர்களுடன் நின்று கொண்டிந்த வேளையில் உயர் பொலீஸ் அதிகாரி ஒருவர் விரைவாகச் சென்று அமைச்சரின் காதில் ஏதோ அவசர தகவலைக் கூறினார். "சேர், பிரதமர் உங்களை தன்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ளடாம். இதுதான் அவர் தந்த தொலைபேசி இலக்கம்" என அந்தப் பொலீஸ அதிகாரி தெரிவித்தார்.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன உடனடியாக வாகனத்தில் எங்கோ புறப்பட்டார். பிரதமர் ரணிலுடன் தொலை பேசியில் தொடர்புகொண்டார்.

தொலைபேசியின் மறுபுறத்தில் பிரதமர் ரணில், "ஜயலத்... யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் கலாசார நிகழ்ச்சியை நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். யாழ்ப்பாணத்திலுள்ள இளைஞர், யுவதிகள இந்த நிகழ்ச்சியில் பங்குகொண்டு மகிழ்ச்சியை அனுபவிக்க இடமளியுஙகள் அந்த இளைஞர்கள், யுவதிகளின குதூகலத்திற்கு எதுவித இடைஞ்சல்களையும் மேற்கொள்ளவேண்டாம். நீங்களும் சாதாரண உடையை அணிந்து அந்த மக்களுடன் கலந்து கொள்ளுங்கள்.அரசியல் வாதிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளுங்கள்" எனப் பிரதமர் தெரிவித்தார்.

அவ்வேளையில் பிரதமர் ரணில் தென் இலங்கையில் பேருவளையில் வேறு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தார்.

பிரதமர் ரணிலின் பணிப்புரைகள் ஒரு சில நிமிடங்களில் நடைமுறைக்கு வந்தன.

அப்போது யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் ரசிகர்களின் எண்ணிக்கை 60 ஆயிரத்தைத் தாண்டிக் கொண்டிருந்தது. மைதானத்திற்குள் ரசிகர்கள் நுழைய முடியாத நிலையில் வீதிகளில் ரசிகர்களின் கூட்டம் நிறைந்து வழிவதாக அமைச்சர் ஜயலத்திற்குத் தகவல் கிடைத்தது. அமைச்சர் ஜயலத் பாதுகாப்பு உயர் அதிகாரியை அழைத்து காரணம் வினவினார். பாதுகாப்பு அதிகாரி அமைச்சருக்கு அளித்த விளக்கம் புதுமையாக இருந்தது.

"சேர், இந்த நிகழ்ச்சிக்கு பொலீஸ் உயர் அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். இதனால் சில வீதிகள் பாதுகாப்புக் காரணமாக மூடப்பட்டுள்ளன" எனத் தெரிவித்தார்.

பொலீஸ் அதிகாரியின் விளக்கம அமைச்சருக்கு ஆத்திரத்தையூட்டியது.

"உயர் அதிகாரிகளுக்குப் பாதுகாப்புத் தேவை என்றால் அவர்களை வீட்டிற்குப் போகச் சொல்லுங்கள், யாழ்ப்பாண மக்கள் எதுவித இடையூறுமின்றி இந்தக் கலை நிகழ்ச்சியை ரசிக்க வேண்டும் என்பதற்காகவே பிரதமர் ரணில் இந்த நிகழ்ச்சியை ஒழுங்குபடுத்தியுள்ளார். பாதுகாப்பு இல்லை என நினைக்கும் பொலீஸ் மற்றும் ராணுவ உயர் அதிகாரிகள் அனைவரையும் வெளியேறுமாறு கூறுங்கள். மூடப்பட்டுள்ள வீதிகள் அனைத்தையும் உடனடியாகத் திறந்து விடுங்கள்" என்றார் அமைச்சர்.

"..... ஆனால் அமைச்சரின் (உங்களின்) பாதுகாப்புக்கு வீதிகளைத் திறப்பது அச்சுறுத்தலாக அமையலாம்" என்றார் அந்தப் பொலீஸ் அதிகாரி.

"..... அரசியலில் ஈடுபட்டுள்ள எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை. மக்களால் மாத்திரமே எங்களுக்குப் பாதுகாப்பை வழங்க முடியும். எனது பாதுகாப்புக் குறித்துக் கவலைப்பட வேண்டாம். உடனடியாக வீதிகளைத திறந்து, மக்கள் இந்த நிகழ்ச்சிக்கு வர இடமளியுங்கள் என்றார் அமைச்சர் ஜயலத்.

அமைச்சரின் இந்த உத்தரவை அடுத்து வீதிகள் திறக்கப்பட்டன. ரசிகர்கள் அலை அலையாக வந்து மைதானத்தை நிறைத்தனர்.

(க)

## வாராந்த நிகழ்வு

யாழ்ப்பாணம், மே1

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினர் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த வெள்ளி நிகழ்வில் இவ்வார நிகழ்வாக தவத்திரு. யோகா சுவாமிகளின் பிரதம சீடராகிய ஸ்ரீமத் செல்லத்துரை சுவாமியின அருளுரை இடம்பெறவுள்ளது. (க)

## தொழிலாளர்களைப் பதம் பார்த்த வெள்ளைப்பூரான்

மந்திகை அரச களஞ்சியத்தில் தேங்கியிருந்த அரிசி மூடைகளை அப்புறப்படுத்திய தொழிலாளர்கள் சிலர் வெள்ளைப் பூரான்களால் கடியுண்ட சம்பவம் கடந்த ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் இடம்பெற்றது. ஞாயிற்றுக்கிழமை 6 பேரும், திங்கட்கிழமை நான்கு பேருமாக மொத்தம் பத்து பேர் வெள்ளைப்பூரானால் கடியுண்டு மந்திகை ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர். (க-117)

## கண்ணீர் அஞ்சலி

கல்விச் சேவையாற்றிய **க.கணேஷ்**

(இளைப்பாறிய அதிபர், யா/ஆனைப்பந்தி வித்தியாலயம்)

அவர்களின் மறைவுக்கு அஞ்சலி தெரிவிப்பதுடன் அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/நல்லூர் காசிப்பிள்ளை வித்தியாலயம்.
(3322)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மத்திய மாவட்ட சென்.ஜோன் அம்புலன்ஸ் படை மாவட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்

**செல்வி ந.வசந்தகுமாரி**

*அவர்களின் உயர்வாகவே வாழ்ந்த தந்தையார்*

**செல்லப்பா நடராஜா** (ஊரெழு)

காலமானதையிட்டு மிகவும் கவலையடைகின்றோம். நேரில் கலந்து இறுதி ஊர்வல மரியாதை அளிக்க படையினால் முடியாததையிட்டு நெஞ்சம் துடிக்கின்றோம். தேசியப் பாசறையில் வெற்றியீட்ட பல வழிகளிலும் உதவி, திருக்கோணமலையிலும் உணவு தந்த சாந்தினி, கமலினி, சாந்தகுமார், நந்தகுமார், வசந்தகுமாரி, சுபோதினி, அச்சுவேலி சொக்கர் குடும்பத்தினருக்கும் உண்மையான உணர்வோடு ஆறுதலும் தேறுதலும் கூறுகின்றோம்.

திரு. திருமதி அருந்தவராஜா
சென்.ஜோன் அம்புலன்ஸ்
(3324)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

ஒட்டகப்புலம் மண்ணில் மலர்வு
13 ❖ 10 ❖ 1925



மாம்புரி மண்ணில் உதிர்வு
01 ❖ 05 ❖ 2001

**திருமதி சிங்கராஜர் கிறிஸ்ரினாப்பிள்ளை**

(தங்கமுத்து)

பேசும் தெய்வம் நீ பேச மறந்தின்று
போனதம்மா ஓராண்டு ஆனாலும்
வீசும் காற்றோடு தம்பி என்றழைக்கும்
நீ பேசும் பாசமொழி கேட்குதம்மா.

*உந்தன் ஆன்மா பரமன் யேசு பாதமதில் இளைப்பாற இறைஞ்சுகின்றோம் அம்மா.*

*நிரந்தர முகவரி:* கண்டிவீதி, மிருசுவில்.
*தற்காலிக முகவரி:* சில்லாலை, பண்டத்தரிப்பு.

உன் பிரிவால் வாடும்:
*மகன:* யேசுதாசன் (துரை)
மகள்மார், மருமகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
(3321)

## விஷேட ஆங்கில, சிங்கள, கணித வகுப்புகள்

- தரம் 06 தொடக்கம் 11 வரை - மாணவர்களுக்கு.
- ஆங்கிலம், சிங்களம், இலக்கணம், கதைக்க, எழுத, பயில அடிப்படையிலிருந்து - தொழில்புரிபவர்களுக்கு.
- **ஆரம்பம்:- 04.05.2002 - காலை 9.00மணி** (புதியநேரம்)
- தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிபெயர்ப்பு செய்தல், கடிதம் வரைதல்.

*தொடர்பு:-*

நா.சுபாஷ்சந்திரன்,
துர்க்கா சந்தைப்படுத்தும் சேவை,
துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
(C-21977)

## நெஞ்சை விட்டகலா

## 25ஆவது ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
05 - 07 - 1950



உதிர்வு
01 - 05 - 1977

**அமரர் குமரையா தேவராஜன்**

ஐயைந்து ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டகலா.

*உமது ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கும்*

*28,றக்காலேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.*

*மனைவி, பிள்ளைகள், உற்றார், உறவினர்.*
(3326)

## மரண அறிவித்தல்

**ஏவின் M.சாமுவேல்**

மாதர்ஸ் பிளேஸ், மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் மானிப்பாய் கிறீன் மொமோறியல் வைத்தியசாலையில் X-ray பிரிவுக்குப் பொறுப்பாக இருந்தவரும் தற்போது அமெரிக்காவில் வசித்தவருமாகிய ஏவின் M.சாமுவேல் 25.04.2002 வியாழக்கிழமை அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற எட்வின் சாமுவேல் தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்ற அருளையா (கோப்பாய்) தம்பதியரின் மருமகனும் கிருபாமணி அவர்களின் அன்புக் கணவரும் ஏரிக், ஈவ்விலின், அனுலா, ஜெயேந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் பமலா பீடில், Dr. Meruyn U.S.A. காலஞ்சென்ற ஜறின் பத்மினி, அருள்ராஜா சொலமன் U.S.A., வினோதினி போல் ஆகியோரின் அன்புச் சகோதரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 27.04.2002 சனிக்கிழமை அமெரிக்காவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Rev. A.A.PAUL
*Principal Bungalow, Jaffna College Vaddukoddai.*
(3325)

# 'ஜயசிகுறு' படைகளை விரட்டியதே பிரபாகரன் பெற்ற மிகப்பெரிய வெற்றி!

## களத்தில் தோல்விகளைச் சந்தித்த ராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள்

**வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் வரையிலான ஏ-9 வீதியைக் கைப்பற்றி, கண்டியில் இருந்து பஸ் சேவையை ஆரம்பிக்க கனவு கண்டார் ஜெனரல் ரத்வத்தை. பலன், பல்லாயிரம் படை வீரர்களின் உயிர்கள் பலியாகின. ஆனால், ஒரு சொட்டு ரத்தமும் சிந்தாமல் - அதே வீதியை- தற்போது ரணிலின் அரசு திறந்துள்ளது. இந்த வீதியைத் தக்கவைக்க அரசு மற்றும் விடுதலைப் புலிகள் எடுத்த நடவடிக்கைகள் குறித்து இக் கட்டுரை ஆராய்கின்றது. சிறிமேவன் கஸ்தூரி ஆராச்சி என்பவரால் எழுதப்பட்டு 21.04.2002 திகதிய 'திவயின' பத்திரிகையின் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

ஈழ இராச்சியத்தின் ஜனாதிபதியும் பிரதமரும் வேலுப்பிள்ளை பிரபாகரனே என்று வன்னியில் நடந்த உள்நாட்டு, வெளிநாட்டுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்த கருத்துக்கள் பல்வேறு வாத விவாதங்களை உருவாக்கியுள்ளன.

யுத்தநிறுத்தம் என்பது ஈழ இராசசியத்தை வென்றெடுக்கும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவது அல்ல எனவும், ஆயுதப் போராட்டத்தைக் கைவிடும் அளவுக்கு இன்னும் சூழ்நிலைகள் உருவாகவில்லை எனவும் ப்ரபாகரன் மிகவும் கவனத்துடன் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் மூலம் எட்டப்படும் அரசியல் தீர்வை விட, போர் நடவடிக்கைகளின் மூலம் உருவாகும் அழுத்தங்கள் காரணமாக எட்டப்படும் அரசியல் தீர்விலேயே பிரபாகரன் அதிக நம்பிக்கை கொண்டுள்ளார் என்பது ஒரு சிலரது கருத்தாகும்.

தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் வரை செல்லும் பிரதான வீதியான யாழ். - கண்டி வீதி எனப்படும் ஏ-9 வீதி அண்மையில் மக்கள் போககுவரத்திற்காக முற்றாகத் திறந்து விடப்பட்டது. வவுனியா, ஓமந்தையில் இருந்து வடக்கே முகமாலை வரையான சுமார் 60 மைல் தூரம் இதுவரை மக்களின் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருந்தது. இந்த இடைத் தூரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் அமைத்துள்ளதால் அங்கு பொது போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறவில்லை. ஆனால் தற்போது இந்த வீதி வழியாக வடக்கிலிருந்து தெற்கிற்கும் தெற்கிலிருந்து வடக்கிற்கும் சென்று வரமுடியும்.

விடுதலைப் புலிகளின் அனுமதியைப் பெற்று, தமது சொந்த வாகனங்களில் இந்த வீதி வழியாக தெற்கிலுள்ள சிங்கள மற்றும் முஸ்லிம் மக்கள் தற்போது போக்குவரத்தை மேற்கொள்ள முடியும். ஏ-9 வீதியில் விடுதலைப் புலிகளின் ப்ரதேசத்திற்குள் அவர்களது போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்திற்கும், வவுனியாவுக்கும் இடையே



ஒரேயொரு தனியார் பஸ் மாத்திரம் சேவையில் ஈடுபட்டதாக அண்மையில் செய்திகள் தெரிவித்தன.

### வடக்கே பஸ்சேவை

தனியார் பேருந்து உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் கைமுனு விஜேரத்ன தெரிவித்த தகவலகளின்படி அவரது சங்கம் கொழும்பு - யாழ்ப்பாண பயணத்திற்கு ஒரு பிரயாணியிடமிருந்து 400 ரூபா அறவிடுவது எனத் தீர்மானித்துள்ளது. முதற்கட்டமாக குறைந்தது பத்து பஸகளுக்காவது அனு மதிப் பத்திரம் வழங்குமாறு அவர் அரசிடம் கோரியுள்ளார்.

இருப்பினும் இந்த பஸ்களுக்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில அரசு ஏனோதானோ போக்கைக் கடைப்பிடிப்பதாக கைமுனு விஜேரத்ன குற்றஞ்சாட்டுகிறார். அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்திற்குக் காரணம் புனர்வாழ்வு மற்றும் மீள்குயமர்வு அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன சம்பந்தப்பட்ட கடிதக்கோவையை தொடர்புடைய அதிகாரிகளுக்கு இதுவரை அனுப்பாமல் இருப்பதே எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், பணத்தைச் சம்பாதிப்பதை மாத்திரமே அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ள சங்கத்திற்குள்ள அவசரத்திற்கு ஏற்ப பொறுப்புள்ள அரசுக்கு பொதுமக்களின் பாதுகாப்பைக் கவனத்திற் கொள்ளாமல் எழுந்தமானத்திற்கு அனுமதிப் பத்திரங்களை வழங்க முடியாது என அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

### தனித்து முடிவெடுக்க முடியாத நிலை

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக எந்தவொரு விடயத்திற்கும் அரசு தனித்து முடிவெடுக்க முடியாது எனவும் அரசு, விடுதலைப் புலிகள், வெளிநாட்டு மத்தியஸ்தர்கள் மற்றும் தேசிய சமாதான சபை ஆகியன ஒன்றிணைந்தே இது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தன மேலும் தெரிவித்துள்ளார்.

அன்று எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தபோது விடுதலைப் புலிகளின் உளவாளி எனக் குறிசுடப்பட்டு - எள்ளிநகையாடப்பட்ட போதுகூட அரச படைகளால் மீட்கப்படாத பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்களின் போக்குவரத்து மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசிய விடயங்களில் தான் அக்கறை கொண்டிருந்தார் எனவும், தற்போது ஏ-9 வீதியில் பொதுப் போக்குவரத்து சேவை விரைவில் ஆரம்பிக்கப்படுவதை பார்ப்பது மாத்திரமன்றி அதற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்ற தன்னைவிட வேறு எவரும ஆவலுடன் இருக்க முடியாது எனவும் அமைச்சர் ஜயலத் தெரிவித்துள்ளார்.

இந்த ஏ-9 வீதி திறக்கப்படுவதைக்காண எத்தனை பேர் ஆவல் கொண்டிருந்தாலும் அன்று பொ.ஐ. முன்னணி அரசின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ஜெனரல் அனுருத்த ரத்வத்தைக்கு இருந்த ஆர்வத்தை ஏனையவர்களின் ஆர்வம் மிஞ்சிவிடாது.

### ரத்வத்தையின் வாக்குறுதி

ஏ-9 எனப்படும் கண்டி - யாழ். வீதியை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டு, கண்டியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு முதலாவது பஸ் 04-02-1998 அன்று அதாவது சுதந்திர தினத்தன்று புறப்படும் என ஜெனரல் ரத்வத்தை வாக்குறுதியளித்தார். விடுதலைப் புலிகளிடமிருந்து இந்த நெடுஞ்சாலையை மீட்பதற்கு 'ஜயசிகுறு' இராணுவ நடவடிக்கையை 13-05-1997 அன்று ஆரம்பித்தார். அந்தப் பாதை திறக்கப்படும் நாளை எண்ணி, எண்ணி பொறுமையிழந்து காத்திருந்தார் ஜெனரல் ரத்வத்தை. அன்று ஆயிரக் கணக்கான படைவீரர்களின் உயிர்களைப் பலி கொடுத்தும், திறக்க முடியாமற் போன ஏ-9 நெடுஞ்சாலையை இன்று ஒரு சொட்டு இரத்தம் கூடச் சிந்தாமல ரணில் விக்கிரமசிங்காவின் அரசினால் திறக்க முடிந்துள்ளது.

ஜெனரல் ரத்வத்தையின் யுத்த, அரசியல் தலைமையின் கீழ் இந்த நெடுஞ்சாலையைத் திறக்க முடியாமல் போனது மாத்திரமின்றி, சுமார் ஒன்றரை வருடம் கடுஞ்சமர் புரிந்து கைப்பற்றிய மாங்குளம், ஒட்டுசுட்டான், கனகராயன்குளம், புளியங்குளம், மடு, நெடுங்கேணி உட்பட முக்கிய பிரதேசங்கள் மிகக் குறுகிய காலமான இரண்டு நாள்களிலேயே மீண்டும் விடுதலைப் புலிகளிடம் கையளிக்க நேர்ந்தது.

அதுமாத்திரமன்றி, அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர்கள் மாநாட்டில் பிரபாகரன் தெரிவித்த தகவல்களின் படி கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான ஆயுதங்கள், ரவைகள், யுத்த உபகரணங்கள், வாகனங்கள் ஆகியன விடுதலைப் புலிகளுக்கு நன்கொடையாகக் கிடைக்கும் அளவுக்கு இராணுவம் படுதோல்வியைச் சந்தித்தது.

நீங்கள் இதுவரை பெற்ற வெற்றிகளில் எதைப் பெரிய வெற்றியாகக் கருதுகிறீர்கள் எனச் செய்தியாளர் ஒருவர் பிரபாகரனிடம் வினவிய போது.....

ஏ-9 நெடுஞ்சாலையைத் திறப்பதற்கு இராணுவம் மேற்கொண்ட "ஜயசிகுறு" இராணுவ நடவடிக்கையை முறியடித்த நிகழ்வே அந்தப் பெருவெற்றி ஆகும் எனப் பிரபாகரன் பதிலளித்தார்.

### நீண்டகாலம் நீடித்த இராணுவ நடவடிக்கை

ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் அரசியல் தலைமையின் கீழ் ஜெனரல் றொஹான் தளுவத்த, லெப். ஜெனரல் சிறிலால் வீரசூரியா, லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல மற்றும் மேஜர் ஜெனரல்களான வசந்த பெரேரோ, நீல் டயஸ், காமினி குணசேகரா, சாந்த கோட்டகொட, நிஹால் மாரம்பே, சிசிர விஜேயசூரியா, சரத் பொன்சேகா மற்றும் பல பிரிகேடியர்கள், கேணல்கள் ஆகிய பலரின் கட்டளையின் கீழ் நீண்ட காலத்திற்கு மேற்கொள்ளப்பட்ட "ஜயசிகுறு" இராணுவ நடவடிக்கையானது இடை நடுவில் விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல்களைச் சந்தித்ததுடன் பெரும் தோல்வியில் முடிவுற்றது.

### இரண்டே தினங்களில் மாங்குளம் புலிகள் வசம்

ஜயசிகுறு நடவடிக்கையில் குறிபிடத்தக்க வெற்றியாக ஏ -9 நெடுஞ்சாலையில் உள்ள மாங்குள நகரை விடுதலைப் புலிகளிடம் இருந்து இராணுவம் கைப்பற்றியதைக் குறிப்பிடலாம். விடுதலைப் புலிகள் தங்கள் அதி உச்ச சக்தியையும் ஆளணிப் பலத்தையும் பயன்படுத்தி மாங்குளம் நகரைத் தக்க வைக்க முயன்றனர். பல்வேறு முயற்சிகளின் பின்னர் இறுதியாக மேஜர் ஜெனரல் சரத பொன்சேகாவின் தலைமையிலான 55ஆவது படையணியினால் மாங்குளம் நகரம் கைப்பற்றப்பட்டது.

ஆனால் இறுதியில் விடுதலைப் புலிகள் இரண்டே இரண்டு தினங்களில் மாங்குளம் உட்பட பல பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை விரட்டி அடித்து, ஏ-9 நெடுஞ்சாலையை ஓமந்தைவரை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இரு முக்கியமான தாக்குதல் மூலம் பரந்தன் மற்றும் கிளிநொச்சியில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரை ஆனையிறவு நோக்கி விரட்டி அடிதத விடுதலைப் புலிகள், அப்பகுதிகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டு வந்தனர்.

இவற்றின்படி 1999இல் ஏ-9 நெடுஞ்சாலையில், தெற்கே ஓமந்தையில் இருந்து வடக்கே பரந்தன் வரையான பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. வன்னியில் இராணுவத்திற்கு பெரும் பின்னடைவாக அமைந்த ஏ-9 நெடுஞ்சாலையை ஓமந்தைக்கும் மாங்குளத்துக்கும் இடைப்பட்ட பிர தேசத்தைப் புலிகளிடம் இழந்த நிகழ்வாகும். இந்தப் படுதோல்விக்கும் பொறுப்பானவர்கள் எனக் கருதப்பட்ட இராணுவ அதிகாரிகளான மேஜர் ஜெனரல் வசந்தபெரேரா, மேஜர் ஜெனரல் காமினி குணரத்னா, பிரிகேடியர் போரான் உட்பட ஏழு உயர் அதிகாரிகள் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

### தப்பினார் சிசிர

தற்போது யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் சிசிர விஜேசூரிய இந்தப் படுதோல்விக்கான பொறுப்புக்களில் இருந்து எவ்வாறோ தப்பிக் கொண்டார். ஜயசிகுறு இராணுவ நடவடிக்கையின்போது படையினரால் கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள் இழக்கப்பட்ட போதிலும் அவர் தனது பதவியை இழக்காமல் அதைத் தக்க வைத்துக்கொண்டார்.

யுத்த நிறுத்த காலங்களை விட போர் நடைபெறும் சந்தர்ப்பங்களிலேயே பெருமளவில் ஆயுத தளபாடங்களை தங்களால் பெற முடிந்ததென செய்தியாளர் மாநாட்டில் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவு, வன்னி (ஜயசிகுறு) ஆகிய இராணுவக் கட்டுப்பாடடுப் பிரதேசங்களை ஆக்கிரமித்துக் கைப்பற்றி பில்லியன்கள் பெறுமதியான பீரங்கிகள், யுத்தடாங்கிகள், ஆயுதங்கள், ரவைகள், யுத்த உபகரணங்கள், வாகனங்கள் ஆகிய பெறுமதி மிக்க பொருள்கள் ஒரு சதமேனும் செலவிடாமல் இலவசமாகக் கிடைத்தன என்பதை எடுத்துக்காட்டவே பிரபாகரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### தளபதி ராஜினாமா

1993இல் பூநகரி இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குப் (தோல்விக்கு) பொறுப்பேற்று அப்போது இராணுவத் தளபதியாக இருந்த ஜெனரல் சிசில் வைத்தியரதனா இராணுவத் தளபதி பதவியை ராஜினாமாச் செய்து வீடு சென்றார். அந்தத்தாக்குதலின்போது பூநகரி முகாம் முற்றிலுமாக விடுதலைப் புலிகளின் தாக்குதல்களுக்கு உட்படாத போதிலும், அந்தச் சண்டையில் யுத்த டாங்கிகள் விடுதலைப் புலிகளிடம் சிக்கின. ஆரம்ப காலத்தில் டாங்கிப் படைப்பிரிவு அதிகாரியாகப் பணிபுரிந்த ஜெனரல் சிசில் வைத்தியரத்ன தனது படைப் பிரிவுக்குச் சொந்தமான யுத்த டாங்கி, எதிரியின் கையில் சிக்கிய சம்பவமானது பெரும் தோல்வியாகும் எனக கருதி அதையே தனது ராஜினாமாவுக்கான காரணமாகக் கொண்டார்.

ஆனால், அதன் பின்னர் முல்லைத்தீவு, கிளிநொச்சி, ஆனையிறவு மற்றும் வன்னிப் பகுதிகளில் அமைந்திருந்த பல இராணுவ முகாம்கள் முற்றிலுமாக விடுதலைப் புலிகளால் அழிக்கப்பட்டன; ஆயிரக்கணக்கான படைவீரர்கள் கொல்லப்பட்டனர். இந்த யுத்தங்களின்போது யுத்த டாங்கிகள் மாத்திரமன்றி ஆட்லறிகளும் விடுதலைப் புலிகளிடம் சிககின. இருப்பினும் இந்தத் தோல்விகளுக்கு பொறுப்பேற்று, எந்தவொரு இராணுவத் தளபதியோ அல்லது மூத்த இராணுவ அதிகாரிகளோ ராஜினாமா செய்ய முன்வரவில்லை. பிற்காலத்தில் அவர்களுக்கு மேன்மேலும் பதவி உயர்வுகள் கிடைத்தன.

### ஆட்டிலறிகள் பறிபோன முதல் சம்பவம்

முலலைத்தீவில் 25ஆவது படையணியின் தலைமையகமும் முகாமும் முற்றிலுமாக விடுதலைப்புலிகளால் அழிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்ட சம்பவமே சிறிலங்கா இராணுவ வரலாற்றில் மிகப் பெரிய தோல்வியாகக் கருதப்படுகிறது. இந்தச் சண்டையின்போது முதல்முதலாக நவீன ரக ஆட்டிலறிகள் இரண்டு விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன; சுமார் ஆயிரத்து 400 படைவீரர்கள் கொல்லப்பட்டனர்.

இவ்விதமான துன்பியல் நிகழ்வுகளுக்குப் பொறுப்பான படையதிகாரி எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லை. அவர்கள் பதவி உயர்வுகளைப் பெற்று தொடர்ந்தும் பணி



யாற்றிவருகின்றனர். அப்போது இராணுவ அதிகாரியாகப் பணியாற்றிய ஜெனரல் றொஹான்தளுவத்த தற்போது 60 வயது பூர்த்தியடைந்தும் தொடர்ந்தும் இராணுவச் சீருடை தரித்து கடமை செய்துகொண்டிருக்கிறார்.

கடந்த 12ஆம் திகதி ஓராண்டு நீடித்த சேவையை முடித்து, 56 வயதை எட்டியதால் ஓய்வுபெற்றுச் செல்லவிருந்த படைகளின் சிரேஷ்ட அதிகாரியான மேஜர் ஜெனரல் நீல் டயஸு"க்கு இரண்டாவது நீடிப்பு இதுவரை வழங்கப்படாததால் அவர் பணிக்குச் செல்லாதிருக்கிறார்.

இருப்பினும் அவர் வகித்த படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவிக்கு வேறு எவரும் இதுவரை நியமிக்கப்படவுமில்லை. மூப்புரிமையின் அடிப்படையில் படைகளின் பிரதிச் சிரேஷ்ட அதிகாரியான லொஹான் குணவர்த்தன அப்பதவியில் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் மேஜர் ஜெனரல் நீல் டயஸு"க்கு மேலும் ஓராண்டுக்குச் சேவை நீடிப்பதை வழங்குவதா? அல்லது அவரை ஓய்வு பெற அனுமதிப்பதா? என்பது குறித்து இதுவரை (கடந்த 18ஆம் திகதி வரை) இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்லவுக்கு பணிப்புரைகள் எவையும் கிடைக்கவில்லை. எனவே படைகளின் சிரேஷ்ட அதிகாரிப் பதவிக்கு வேறு ஒருவரை நியமிக்க இராணுவத் தளபதிக்கு முடியாதுள்ளது.

### தளபதி நியமனத்தில் மத பீடங்களின் தலையீடு

கடந்த வருடம் மேஜர் ஜெனரல் நீல் டயஸ் 55 வயதைப் பூர்த்தி செய்தபோது அவர் ஓய்வுபெற்றுச் செல்வார் எனக் கருதி படைகளின் சிரேஷ்ட அதிகாரி பதவிக்கு மேஜர் ஜெனரல் குணவர்த்தனவை நியமிக்க முற்பட்ட வேளையில் இராணுவத் தளபதி எதிர்நோக்கிய கஷ்டங்கள், அதன் மூலம் படித்த பாடங்கள் ஆகியன மறக்க முடியாத சம்பவங்களாக அமைந்தபடியால் எந்தவொரு நியமனத்தையும் மேற்கொள்ளாது இராணுவத் தளபதி வாளாவிருக்கிறார்.

மேஜர் ஜெனரல் நீல் டயஸை ஓய்வுபெற்றுச் செல்லவிடாது - தொடர்ந்தும் சேவையில் வைத்துக் கொண்டு- அவருக்கு இராணுவத் தளபதி பதவி வழங்கப்படவேண்டும் என பௌத்த விஹாரைகள் ஊடாக சில சக்திகள் முயன்றுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் மேஜர் ஜெனரல் நீல் டயஸை வீட்டிற்கு அனுப்பி, இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் குணவர்த்தனவை நியமிக்க வேண்டும் என கத்தோலிக்க தேவாலயங்கள் ஊடாக சில சக்திகள் முயன்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழில்: கஜனி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# தொலைவில் இருந்தபடி.....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரோபோககளைப் பயன்படுத்துவது மிகச் சிறந்தது என்று மருத்துவ நிபுணர்கள் கருதுகின்றார்கள்.

சத்திர சிகிச்சையை டாக்டர்கள் செய்யும்போது அதில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. சிகிச்சையில் ஈடுபடும் டாக்டருக்கு கை நடுக்கம், பதற்றம் போன்றன இருந்தால் அது சிகிச்சையின்போது நோயாளியைப் பாதிக்கும். அத்துடன் சத்திர சிகிச்சையில் ஈடுபட்டிருக்கும்போது தனது மூளையை சிகிச்சை குறித்துச் சிந்திப்பதற்கு அவரால் அனுமதிக்கமுடியாது.

ஆனால், ரோபோ சத்திர சிகிச்சையை மேற்கொண்டால் அதனை அவதானித்தபடி இருக்கும் டாக்டரால் தனது மூளையை முழுமையாக சிகிச்சைக்குப் பயன்படுத்த முடியும்.

இதற்காக தன்னிச்சையாக செயற்படும் ரோபோக்களை உருவாக்கும் முயற்சிகள் மிக வேகமாக நடக்கின்றன.

நாம் இங்கு பார்க்க வந்தது அதுவல்ல, ரோபோவைப் பயன்படுத்தி அண்மையில் செய்யப்பட்ட தொலைதூர சத்திரசிகிச்சை பற்றித்தான்.

அமெரிக்காவில் இருந்துகொண்டு பிரான்ஸில் இருந்த நோயாளி ஒருவருக்கு தொலைதூர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

பிரான்ஸின் ஸ்ட்ராஸ்பூர்க் (Strasbourg) என்ற இடத்தில் உள்ள யுரோப்பியன் இன்ஸ்ரிரியூட் ஒவ் டெலி சேர்ஜரி (Europen Institute of Tele Surgery) என்ற நிறுவனத்தைச் சேர்ந்த டாக்டர்களே இந்தச் சாதனையைச் செய்திருக்கிறார்கள்.

டாக்டர் குழு ஒன்று அமெரிக்காவில் இருந்தது. மற்றொரு குழு பிரான்ஸில் இருந்தது. பேராசிரியர் ஜேக்கஸ் மார்ஸ்காஸ் (Jaques Marescaux) என்பவர் இந்தக் குழுவின் தலைவர்.

இந்த இரண்டு இடங்களுக்கும் இடைப்பட்ட தூரம் 14 ஆயிரம் கிலோமீற்றர்கள். அதாவது 8 ஆயிரத்து 700 மைல்கள்.

இதற்காகப் பயன்படுத்தப்பட்ட முக்கிய கருவிகள் ரோபோ, வீடியோ மற்றும் அதிவேக பைபர் ஒப்டிக் கேபிள்.

அமெரிக்காவில் இருந்த டாக்டரின் அசைவுகள் கேபிள் வழியாக பிரான்சுக்கு அனுப்பப்பட்டது.

அமெரிக்காவில் உள்ள டாக்டர் சத்திர சிகிச்சைகளுக்கான அசைவை அங்குள்ள கருவி மூலம் செய்வார். அது மிகமிக விரைவாக கேபிள் மூலம் பயணித்து பிரான்ஸிலுள்ள ரோபோவைச் சென்றடைந்தது. அதற்கேற்ப ரோபோ சத்திரசிகிச்சையை மேற்கொண்டது. (இப்போது டைட்டானிக் படத்தில் கடலின் ஆழத்தில் கிடந்த கப்பலின் உள்ளே சென்ற ஒரு கருவி மேலே கடல் மட்டத்தில் இருந்த ஒருவரின் அசைவுக்கு ஏற்ப காரியமாற்றியதே! தடைகளை விலக்கி அந்தப் பெட்டியைத் தூக்கி வந்ததே அந்தக் காட்சியை நினைவில் கொள்ளுங்கள். அதுபோன்ற ஒரு செயற்பாடே இதுவும்.)

அமெரிக்க டாக்டரின் அசைவுகள் 200 மில்லி செக்கன்களில் பிரான்ஸிலுள்ள ரோபோவைச் சென்றடைந்தது. அந்தக் கட்டளையை ஏற்று ரோபோ நோயாளிக்கு அறுவைச் சிகிச்சை செய்தது.

அந்த நோயாளிக்கான கல்லீரல் சத்திரசிகிச்சை இவ்வாறு வெற்றிகரமாகச் செய்து முடிக்கப்பட்டது.

இங்கு மிக முக்கியமானது என்னவென்றால் அமெரிக்க டாக்டரின் கட்டளைகள் 330 மில்லி செக்கன்களுககுள் ரோபோவைச் சென்றடைந்துவிட வேண்டும். இல்லை என்றால் சிகிச்சை குளறுபடியாகி நோயாளியின் நிலை அதோகதிதான். இதற்கான அடிப்படை பைபர் ஒப்டிக் கேபிளின் தகவலைக் கொண்டு செல்லும் திறன்தான்.

இவ்வாறான சத்திரசிகிச்சைக்குப் பயன்படும் பைபர் ஒப்டிக் கேபிள குறைந்தது 90 மெகாபைட் வீடியோ படத்தை கொண்டு செல்லும் - காவும் - திறன்படைத்ததாக இருக்க வேண்டும்.

முதன்முதலில் அமெரிக்காவின் ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தில்தான் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. அப்போது 17 பேருக்கு தொலைதூர சத்திர சிகிச்சை மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்தத் தொலைதூர சத்திர சிகிச்சை முழு அளவில் வெற்றிபெற்றால் அதனால் ஏற்படும் நன்மைகள் பல. நோய்களுக்கான விசேட நிபுணர்களின் சேவையை உலகெங்கிருந்தும் பெறமுடியும். வைத்திய நிபுணர்கள் இல்லையே என்று அழுது கொண்டிருக்க வேண்டியதில்லை. மொழி புரியாத அமெரிக்காவுக்கோ லண்டனுக்கோ சென்று அவதிப்படாமல் இங்கிருந்தபடியே சிகிச்சை பெறலாம்.

யுத்த களங்களில் படுகாயமடையும் படையினருக்கு டாக்டர்கள் அங்கு செல்லாமலேயே சிகிச்சை அளிக்க முடியும்.

இதனாலேயே அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்ரகன் அதிகாரிகள் இந்த கிசிக்சை முறையில் தற்போது மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இது சரியாக நடைமுறைக்கு வந்தால் ஆப்கானில் இந்த வசதிகளைக் கொண்ட ஒரு மருத்துவ மனையை நிறுவிவிட்டுத் தேவையான போதெல்லாம் அமெரிக்காவில் இருக்கும் தமது டாக்டர்களின் சேவையை ஆப்கானில் இருந்தபடியே பெறமுடியும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள் போலும். ★

## 'ஜயசிக்குறு' படை....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

எவ்வாறாயினும் எதிர்காலத்தில் 55 வயதைப் பூர்த்தி செய்யும் எந்தவோர் அதிகாரிக்கும் சேவை நீடிப்பை வழங்கி, அவர்களுக்கு இராணுவத் தளபதி பதவியை வழங்குவது இல்லை எனவும் 55 வயதுக்கு உட்பட்ட மேஜர் ஜெனரல் பதவி வகிக்கும் ஒருவருக்கே இராணுவத் தளபதி பதவி வழங்கப்படவேண்டும் எனவும் மூத்த அதிகாரிகள் எடுத்துக் கூறியுள்ளதாகத் தெரியவருகிறது.

இதற்கிடையில் இராணுவத் தகவல் பணிப்பாளர் மற்றும் இராணுவப் பேச்சாளர் பதவிக்கு கேணல் அருண ஜயதிலக்க நியமிக்கப்படவுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது மத்திய மாகாணக் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றும் ஜயதிலக்க தற்போதைய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரத்ன பணியாற்றும் சிங்க றெஜிமென்றைச் சேர்ந்த திறமைமிக்க அதிகாரியாவார். ★

# சாரதி லைசென்ஸ் பெறுவதற்கு குடாநாட்டில் திண்டாட்டம்

யாழ்ப்பாணம்,மே1

யாழ்.செயலகத்தில் உள்ள மோட்டார் பதிவுத் திணைக்களத்துக்கு நிரந்தரமாக ஒரு வாகனப் பரிசோதகர் இல்லாத காரணத்தினால் வாகன உரிமையாளர்கள் பலர், சாரதி அனுமதிப்பத்திரங்களைப் பெறமுடியாத நிலையில் திண்டாடுகின்றனர்.

இது தொடர்பாக யாழ்.அரசாங்க அதிபர், இராணுவ உயர் அதிகாரிகள் மற்றும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உரிய திணைக்கள மேலதிகாரிகளுடன் தொடர்புகொண்டும் பலன் ஏதும் கிட்டவில்லை.

கடந்த பல மாதங்களுக்கு முனபு வருகைதந்த பரிசோதகர், ஒரு மாத காலம் இங்கு தங்கிநின்று தமது பணிகளை மேற்கொண்டு வந்த போதும் விடுமறையில் சென்ற அவர் மீண்டும் இங்கு திரும்பி வரவில்லை. இதன் காரணமாகப் பலரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாடு முழுவதும் 56 வாகனப் பரிசோதகர்கள் உள்ளபோதும் இவர்களில் ஒருவர் மட்டுமே தமிழராவார். சிங்களமொழிப் பரிசோதகர்கள் எவரும் தமிழ்ப் பகுதிகளில் பணியாற்ற முன்வராமையும் தமிழர் ஒருவரே சகல தமிழ்ப் பிரதேசங்களிலும் பணியாற்ற வேண்டியிருப்பதாலும் இவ்வாறான நிலை நீடித்து வருகின்றது.

கடந்த காலங்களை விட நாட்டில் நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் யாழ்.மாவட்டத்துக்கெனத் தனியான ஒரு பரிசோதகரை நியமிப்பதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பலரும் எதிர்பார்க்கிறார்கள். (க-10)

---

## கண்ணீர் அஞ்சலி

நெடுந்தீவுக் கோட்டக்கல்விப் பணிப்பாளர்
திரு.க.அரசரத்தினம் அவர்களின்
பாசமிகு தந்தையார்
**கணபதிப்பிள்ளை கனகராசா**
*(முன்னாள் பதிவாளர் - தீவுப்பகுதி)*

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக்கழகம்
தீவக கல்வி வலயத்திணைக்களம்.
(3335)

---

குமுக்கன்குளம் நாச்சிமார் கோயில் பரிபாலனசபை 27.04.2002 அன்று நடத்திய

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

வெற்றியீட்டிய இலக்கங்கள்:-

முதலாம் பரிசு - 0410
இரண்டாம் பரிசு - 1741
மூன்றாம் பரிசு - 0071

ஆறுதல் பரிசுக்குரிய இலக்கங்கள்:
1800, 2860, 4400, 2063, 2546

*அராலி மத்தி, வட்டுக்கோட்டை.* (3336) *- ஆலய நிர்வாகிகள்.*

---

## மதுபான முகவர்களுடனான கலந்துரையாடல் கூட்டம்

எமது வலிகாமம் வடிசாலையில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகளின் விநியோகம் தொடர்பில் மதுபான முகவர்களுடனான விசேட கலந்துரையாடல் கூட்டம் நாளை (02.05.2002) வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் கீழ்க்காணும் முகவரியில் நடைபெறவுள்ளதால் சகல மதுபான நிலைய முகவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**வலிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,**
*பிப்பிலிச் சந்தி, மானிப்பாய்.*

கூட்டுறவுச் சேவையிலுள்ள,
பொதுமுகாமையாளர்.

(சி-21986)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

### வணிகமுதற்தேர்வு - 2000

மேற்படி வணிக முதற் தேர்வு 15.05.2002 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்திலும் வவுனியா வளாகத்திலும் ஆரம்பமாகவுள்ளது.

இத்தேர்வுக்கான பரீட்சை அனுமதி அட்டையையும் நேர அட்டவணையையும் 10.05.2002 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும் 13.05.2002 தொடக்கம் வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021-3612 (யாழ்ப்பாணம்) 024-22265 (வவுனியா) என்ற தொலைபேசி எண்களுடன் தொடர்புகொள்ளவும்.

**பதிவாளர்**
**30.04.2002**

(சி-21984)

---

## பதவி வெற்றிடம்

### கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை வெற்றிடங்கள்

1. a. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (Junior Security Officer)
   (30 - முப்பதிற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உண்டு)
   b. பாதுகாப்பு மேற்பார்வையாளர் (Security Supervisor)
2. கல்வித் தகைமை :- க.பொ.த. (சா.த) சித்தி
   *(ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)*
3. a. உயரம்: 5'4" (குறையாமல்)
   மார்பு: 32" (குறையாமல்)
   *(நல்ல கண்பார்வையும், நல்ல திடகாத்திரமும் இருத்தல் வேண்டும்)*
   *(25 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்)*

சம்பளம்: தொடக்க சம்பளமாக ரூபா 3500/= மற்றும் கடமை வரவுக்குரிய ஊதியம் (Attendance Bonus) வழங்கப்படும்.
(தகுதிக்கேற்ற சம்பள மாற்றம் உண்டு)

நேர்முகப் பரீட்சை: 04.05.2002 சனிக்கிழமை காலை 10.00 மணி.
*(கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்களுடன் வரவும்)*

*No.347, கஸ்தூரியார் வீதி, (3ஆம் மாடி), யாழ்ப்பாணம்.* (சி-21982) - பணிப்பாளர்.

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு

## அறிவித்தல்

### கலைமுதற்தேர்வு - 2000

துணைப்பாடம் EX.BM 1.0 அடிப்படைக் கணிதம்

மேற்படி கலைமுதற் தேர்வுக்கான துணைப்பாடம் (Ancillary Subject), Ex.BM 1.0 அடிப்படைக் கணிதத்துக்கான பரீட்சை 22.05.2002 அன்று (9.30-12.30) வணிக முதற்தேர்வு - 2000 உடன் இணைந்து வவுனியா வளாகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றேன்.

**பதிவாளர்**
**30.04.2002**

(சி-21985)

---

## மரண அறிவித்தல்.

### திருமதி குமாரசாமி தர்மாம்பிகை (துரை)

சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குமாரசாமி தர்மாம்பிகை (துரை) 29.04.2002 திங்கட்கிழமை இறைபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - பொன்னம்மா தம்பதிகளின் இளைய புத்திரியும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற குமாரசாமி (Tea maker) அவர்களின் அன்பு மனைவியும் கல்வளை சேயோன் (ஆஸ்திரேலியா), ரோகினி, புஸ்பா (வவுனியா), காலஞ்சென்ற சற்குணசேயோன், விஜயா (வவுனியா), காலஞ்சென்ற ஜெயகுணசேயோன் ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேஸ்வரி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கோபாலகிருஸ்ணன், தில்லைநாதன், திருமதி சற்குணசேயோன், காலஞ்சென்ற கமலேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2002) வியாழக்கிழமை வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்வி ந.கனகரட்ணம்
*சுதுமலை மேற்கு, மானிப்பாய்.*

*34, கதிரேசன் வீதி, வவுனியா.* (3331)

# இடைக்கால நிர்வாகத்தோடு மட்டும் அரசு-புலிகள் பேச்சு நின்றுவிடக்கூடாது

ஜகார்த்தா,மே1

அரசு - புலிகள் பேச்சு இடைக்கால நிர்வாகத்தோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. தூரதிருஷ்டியுடன் அது நடைபெறவேண்டும். இறுதித்தீர்வைக் கருத்தில் கொள்ளாமல் இடைக்காலத் தீர்வில் மட்டும் கவனம் செலுத்தினால் அது வெறும் செயற்கையான நடவடிக்கையாகவே அமையும்.

- இப்படி நோர்வே அனுசரணைக் குழுத் தலைவரும், நோர்வே அரசின் பிரதி வெளிவிவகார அமைச்சருமான விடா ஹெல்கிசன் ஜகார்த்தாவில் தெரிவித்தார்.

இலங்கை அரசுக்கும் புலிகளுக்குமிடையே தாய்லாந்தில் ஜூன் நடுப்பகுதியில் நடைபெறவிருக்கும் பேச்சுகள் பற்றிய முடிவுகளைச் செய்வதற்கு இலங்கையில் தங்கியிருந்துவிட்டு இந்தோனேஷியா வந்தபோது அவர் இதைத் தெரிவித்தார்.

(உ-6)

# கொழும்பு வந்த யுத்தக் கப்பல்

கொழும்பு,மே1

அமெரிக்காவின் பாரிய யுத்தக் கப்பல்களில் ஒன்றான 'யூ.எஸ்.எஸ். கூப்பர்' நேற்றுக் காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

ஏவுகணை எதிர்ப்புக் கப்பலான இதனைப் பார்வையிட செய்தியாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அமெரிக்கத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

கடந்த 15 வருடங்களின் பின் அமெரிக்க யுத்தக் கப்பல் ஒன்று இலங்கை வந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இலங்கை - அமெரிக்க நட்புறவுக்கு அடையாளமாகவே இந்தக் கப்பல் இலங்கைக்கு வந்திருக்கிறது என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்று மாலை இந்தக் கப்பல் இங்கிருந்து புறப்பட்டுச் சென்றது.

# செயற்கை முறை சினைப்படுத்தல்

வலி.தெற்கு,மே1

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வட்டுக்கோட்டை கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் தற்போது ஆடு, மாடுகளுக்கான செயற்கைமுறைச் சினைப்படுத்தல் இடம்பெற்று வருகின்றது.

இவ்வலுவலகத்தில் கால்நடைகளுக்கு செயற்கைமுறை சினைப்படுத்தலை மேற்கொண்டவர்கள் மூன்று மாதத்தின் பின்னர் அந்தக் கால்நடைகளை கொண்டுவந்து சோதனைசெய்து, கால்நடைகள் சினைப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்து கொள்ளுமாறு அறிவிககப்பட்டுள்ளது.

(க-152)


**சுடர் ஒளி**

ஏப்ரல் 30 ~ மே 6

- அந்தரங்கமாக வைக்கப்பட்டிருந்த பாலசிங்கத்தின் லண்டன் பயணம்
- குடாநாட்டுக்கு வந்த புலிகள் தீவகத்திற்கு செல்ல முடியாத நிலை
- ஓமந்தை வரை சென்று ஏமாறும் பயணிகள்
- குடாநாட்டில் புலிகளைத் திணற வைக்கும் சமுதாய சீர்கேடுகள்

மற்றும் அரசியல் அம்பலம், சொற்சிலம்பம், பித்தன் பதில்கள்

இணையத் தளங்களில் இருந்து மசாலா மிக்ஸ், சிறுவர் பகுதி, இலவச மருத்துவ ஆலோசனை உட்பட மற்றும் சுவையான அம்சங்கள்

(C-21995)



**SHAMROCK**

**A/L 2004**

*புதிய பிரிவு*

Geo. - Mr. கிரி
Tam. - Mr. அருள்
Chris. - Mrs.A.மல்லிகா
Hindu. - Mr.நித்தி
Log. - Mr.மகிந்தன்

- Gr.(3) முதல் O/L வரை
- புலமைப்பரிசில் Gr. 5

(C/21990)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
இலங்கை.

கலைப்பீடம், முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்

**இரண்டாம் மொழி ஆங்கிலம் மீள் பரீட்சைகள் - 2002**

ESI Level II, III பரீட்சை நடைபெறும் திகதிகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. Level II பரீட்சை 16.05.2002ஆம் திகதிக்கும் Level III பரீட்சை 17.05.2002ஆம் திகதிக்கும் பிற்போடப்பட்டுள்ளது. Level I பரீட்சை திட்டமிட்டபடி 06.05.2002 ஆம் திகதியன்று நடைபெறும். மாணவர்கள் இம்மாற்றத்தைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

*பதிவாளர்.*

(C/21992)

யாழ். பல்கலைக்கழகம்
இலங்கை
சித்த மருத்துவத்துறை
BSMS இறுதி ஆண்டுப் பரீட்சை

சித்த மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி (BS MS) இறுதியாண்டுப் பரீட்சை எதிர்வரும் 13.05.2002ஆம் திகதிமுதல் ஆரம்பமாகும்.

*பதிவாளர்*
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(C/21988)

# மனமுவந்த பாராட்டுக்கள்

எமது கல்லூரியின் பழைய மாணவரும்
முன்னாள் பெற்றோர்களில் ஒருவருமான
தீவகக் கல்வி வலய கல்விப் பணிப்பாளர்

**திரு.ப.விக்கினேஸ்வரன்**

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு II இற்கு பதவியுயர்வு பெற்றுள்ளமையையிட்டு அவரை மனமுவந்து பாராட்டுகின்றோம்.

யாழ்ற்ரன் கல்லூரி, காரைநகர்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள்.

(3341)


**விற்பனைக்கு**

**SHARP 1118, 1016**
போட்டோ கொப்பி
TONER, DRUM, DEVELOPER
ஆகியவை விற்பனைக்கு உண்டு

**SRI MURUGAN**
303, K.K.S. ROAD,
JAFFNA.
T.P. 021-2670

(C/21987)



**ராஜா** யாழ்ப்பாணம்

3ஆவது ஜனத்திரள் வாரம்
விஜய், பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த

**தமிழன்**

காட்சிகள்: 10.30, 2.30, 5.30 (புதிய நேரம்)

(C/21980)



**நிறைஞ்சனாஸ்** சங்கானை

அஜித், ஷாலினி, ரகுவரன் நடித்த

**அமர்க்களம்**

(சீடீஸ்)
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (புதியநேரம்)

(C-21981)



**நாகம்ஸ்** சுன்னாகம்

4ஆவது வெற்றி வாரத்தை நோக்கி
ரொப்ஸ்டார் பிரசாந்த், சிம்ரன், வடிவேலு நடித்த

**தமிழ்**

(சீடீஸ்)
காட்சிகள்:11.00, 3.00 (பு.நே.)

(3337)


# பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது வித்தியாலயத்தின்
பழைய மாணவரும்
தீவகக் கல்வி வலயத்தின்
கல்விப் பணிப்பாளருமாகிய

**உயர்திரு.**
**ப.விக்கினேஸ்வரன்**

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு IIஇற்கு பதவியுயர்வு பெற்றுள்ளதையிட்டு அவரைப் பாராட்டுவதுடன் அவர் எதிர்காலத்தில் மேலும் பல பதவி உயர்வுகளைப் பெற்று எமது பிரதேச கல்வி அபிவிருத்திக்குச் சேவை செய்திட மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/வியாவில் சைவ வித்தியாலயம், காரைநகர்.

(3342)

# சர்வதேச இந்துமத குருபீடம்

(அரச அங்கீகாரம் பெற்ற சமய ஸ்தாபனம்)
யாழ்.மாவட்ட அமைப்பாளர்களின்
ஏற்பாட்டில்

**இந்துமத குருமார்களுடனான**
**கலந்துரையாடல்**

இடம் :- *யாழ்.மாவட்டச் செயலகம், 'சிவானந்த பவனம்', முருகமூர்த்தி வீதி, சங்கானை.*
நாள் :- *இன்று (01-05-2002) புதன்கிழமை*
நேரம் :- *பிற்பகல் 1 மணிமுதல் 3 மணிவரை.*

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி
*"சிவாகம கலாநிதி"*

**ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்**

தலைமையில் கலந்துரையாடல் நடைபெறும்.
அனைத்து இந்துமத குருமார்களையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தையாக் குருக்கள் நாகேந்திரசர்மா,
அமைப்பாளர் - மல்லாகம்.

சிவ நித்தியானந்த சிவாச்சாரியார்
பிரதம அமைப்பாளர்

சர்வதேச இந்துமத குருபீடம்,
யாழ்.மாவட்டச் செயலகம்,
'சிவானந்த பவனம்',
சங்கானை.

(3348)

# மேதின அறைகூவல்! மேதின அறைகூவல்!

## இழந்த கூட்டுறவுச் சொத்தினை மீளப் பெறுவதற்கு பனை தென்னை வள கூட்டுறவாளர்களே அணிதிரள்வீர்......!

கடந்த ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு நிறுவனங்களால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டுவந்த திக்கம் வடிசாலையானது கடந்த 08.01.2001ஆம் திகதி ஆயுத முனையில் அபகரிக்கப்பட்டு தற்போது அரச நிறுவனமாகிய பனை அபிவிருத்திச் சபையினால் நிர்வகிக்கப்படுகிறது. இழந்த திக்கம் வடிசாலையையும் ரூபா 600 லட்சத்துக்கும் மேற்பட்ட சொத்துக்களையும் கூட்டுறவு அங்கத்தவர்கள் மீளப்பெறுவதற்கு சகலரும் ஓர் அணியில் திரண்டு குரல் கொடுக்க இந்த மே தினத்தில் உறுதி எடுத்துக்கொள்வோமாக!

**வாழ்க கூட்டுறவு!** **வளர்க பனை தென்னை வள உற்பத்தியாளர் ஐக்கியம்!!**

வடமராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி.

*கரவெட்டி வடக்கு, கரவெட்டி.*

(C-21991)

# மரண அறிவித்தல்

## இக்னேசியஸ் அன்ரன் நேசராஜா

(ராஜன்)

யாழ்ப்பாணம், மாட்டின் வீதியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் செவ்ரனை வதிவிடமாகவும் கொண்ட இக்னேசியஸ் அன்ரன் நேசராஜா அவர்கள் 19.04.2002 வெள்ளிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இக்னேசியஸ் - பிலோமினா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் திருமதி மரியா எவறெஸ்ரா அவர்களின் அன்புக் கணவரும், மரியா, ஹென்லி, வில்லி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சவரிமுத்து - எலிசபெத் தம்பதிகளின் அருமை மருமகனும், ராணி (கொழும்பு), சூட்டி (பிரான்ஸ்), பபா (லண்டன்), விஜி (பிரான்ஸ்), கசில்டா (பிரான்ஸ்), அசம்ரா (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரனும் வெலிங்டன் (மஸ்கெலியா), றோஸ்மேரி (யாழ்ப்பாணம்), திருமதி சொபியா விஸ்வலிங்கம் (யாழ்ப்பாணம்), திருமதி பாலகாந்தன் (கொழும்பு), மனோகரன் (பிரான்ஸ்), ரஞ்சன் (பிரான்ஸ்), திருமதி ரஞ்சினி சாள்ஸ் (பிரான்ஸ்), திருமதி ராகினி எமில்டன் (பிரான்ஸ்), திருமதி சாந்தி (பிரான்ஸ்), திருமதி யூலியட் நந்தன் (பிரான்ஸ்), பொபி (பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.05.2002) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பிரான்ஸில் நல்லடக்கம் செய்யப்படும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 02.05.2002ஆம் திகதி வியாழக்கிழமை புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் காலை 6.30 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*8,இராசாவின் தோட்டம் லேன், யாழ்ப்பாணம்.*

தகவல்:
செல்வி
றோஸ்மேரி சவரிமுத்து

(3349)

# பொருளாதாரத்தைப் பாதுகாக்க புதிய சீர்திருத்தங்கள் அவசியம்

## மத்திய வங்கி அறிக்கையில் வற்புறுத்தல்

கொழும்பு,மே1

நாட்டின் தேசிய பொருளாதாரத்தைப் பாதுகாப்பதற்காக உடனடியாக புதிய சீர்திருத்தங்கள் நடைமுறைப் படுத்தப்படவேண்டும்.

இலங்கை மத்திய வங்கி தனது ஆண்டறிக்கையில் இவ்வாறு தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாட்டில் சிறந்த பொருளாதார அடித்தளம் அமைக்கப்பட முடியாது போனமைக்கு சீ[illegible] [illegible]ளாதாரக் கொள்கை இ[illegible] [illegible]ணமாகும்.

புதிய அரசு பதவியேற்றிருப்பதால் [illegible] பொருளாதார சீர்திரு[illegible] முறைப் படுத்த முடியும் - என நம்பப்படுகிறது.

கடந்த வருடம் 1.4 விகிதப் பொருளாதார வளர்ச்சியே ஏற்பட்டுள்ளது. இது மிகவும் குறைந்த வளர்ச்சியாகும். இதற்கு மின்சார நெருக்கடி, கட்டுநாயக்கா மீதான தாக்குதல், அமெரிக்காவில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலின் விளைவுகள் என்பன காரணமாகும்.

மறுமலர்ச்சிக்கான அறிகுறிகள் தென்படுவதால் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யக்கூடிய புதிய பொருளாதாரக்கொள்கைகளை அரசு உடன் நடைமுறைப்படுத்த வேண்டும்.

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-12)

## பட்டாசு கொளுத்தியதால் அடிதடி!

# வெடிச்சத்தங்கள் கேட்டு பிள்ளைகளையும் இழுத்துக்கொண்டு ஓடினார் பெண்மணி!

இரவு நேரத்தில் வீட்டு வாசலில் அடுத்தடுத்துக் கேட்ட வெடிச்சத்தத்தை, இராணுவம் சுடுவதாக நினைத்துப் பயந்த பெண்மணி, உண்மை தெரிந்த பின்னர் பட்டாசு கொளுததியவர்களுடன் தகராறில் ஈடுபட்டதில் இருவர் காயமடைந்தனர்.

கோண்டாவில் கிழக்கு கொண்டலடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச சம்பவம் பற்றி கூறப்படுவதாவது:-

வீதியில் பட்டாசு கொளுத்திய இளைஞர்கள் சிலர் அவற்றில் சிலவற்றை அப்பகுதியில் இருந்த் வீடொன்றின் முன்பாக எறிந்தனர்.

அந்தச் சத்தத்தைக் கேட்ட பெண்மணி ஒருவர் 'ஐயோ, ஆமி சுடுகிறான்' என்று அலறியபடி தனது பிள்ளைகளுடன் அருகிலுள்ள உறவினர் வீட்டுக்கு தலைதெறிக்க ஓடினார். பின்னர்தான் உண்மை தெரியவந்தது. அதைத் தொடர்ந்து அந்தப் பெண்மணி அயலவருடன் சேர்ந்து படடாசு கொளுத்தியவர்களுடன் வாய்த் தகராறில் ஈடுபட்டார். அது கைகலப்பாக மாறியதில் இருவர் காயமடைந்தனர்.

இறுதியில் அப்பகுதிக் கிராம அலுவலர் தலையிட்டு சமாதானம் ஏற்படுத்தினார்.

(ஒ-180)

## மேயரின் செயற்பாட்டை ஆட்சேபித்து

# யாழ். மாநகர சபையில் எதிரணி வெளிநடப்பு!

யாழ்ப்பாணம்,மே1

நேற்றுக்காலை நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் மேயர் செ.கந்தையனின் தலைமையுரையை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் செவிமடுக்காது, பகிஷ்கரித்து சபைக கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செயதனர்.

மேயர் சபையின் கூட்டுப் பொறுப்பை உதாசீனம் செய்து, தன்னிச்சையாகச் செயற்படுவதாகக் குற்றம் சுமத்தி, ஈ.பி.டி.பி., புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.

எனினும் பின்னர் மேயரின் தலைமை உரை முடிவுற்றதைத் தொடர்ந்து இடம்பெற்ற சபை விவாதத்தில் அனைத்து உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

நேற்றைய சபையின் கூட்டம் வழமைக்கு மாறாக கூச்சலும் குழப்பமும் நிறைந்ததாக நடைபெற்று முடிந்தது.

(உ-9)

# மத்திய மாகாண சபை நெருக்கடிக்குத் தீர்வு

## புதிய முதலமைச்சராக திசாநாயக்க பதவியேற்பு

மத்திய மாகாண சபையின் புதிய முதலமைச்சராக டபிள்யூ.எம்.பீ.பி.திசாநாயக்கா நேற்று பதவியேற்றார். அவர் ஆளுநர் கே.பி.ரத்நாயக்க முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற பேச்சுக்களின் போது மாகாணசபையின் நிர்வாகத்தை ஐ.தே.கட்சியிடம் கையளிக்க இணக்கம் காணப்பட்டது.

இந்த இணக்கத்தை அடுத்தே சபையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திசாநாயக்க புதிய முதலமைச்சரானார்.

முதலமைச்சர் பதவி வகித்த பொ.ஐ.முன்னணியின் சரத் ஏக்கநாயக்க இதற்கு முன்னர் பதவியை ராஜினாமா செய்தார்.

தனது முதலாவது பணி மத்திய மாகாண அரசாங்க ஊழியர்களின் ஏப்ரல் மாதச் சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுப்பதே என்றும் அடுத்த ஓரிரு தினங்களில் சம்பளம் வழங்கப்படும் என்றும் புதிய முதலமைச்சர் கூறினார்.

## தாச்சி நடுவர் பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம்,மே1

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்க நடுவர்களுக்கான பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் கோண்டாவில் ஸ்ரீ நாராயணா சனசமூக நிலையத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளன.

இவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. (க-10)

## லொறிகள் வரத் தொடங்கின

யாழ்ப்பாணம்,மே1

கொழும்பில் இருந்து பொருள்களுடன் புறப்பட்ட லொறிகள் சில நேற்று யாழ்ப்பாணத்தை வந்து சேர்ந்துள்ளன.

இப்பொருள் யாழ்ப்பாணத்தில் இறக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தில் பல பொருட்களின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

இதுவரை நாளும் 100 ரூபாவுக்கு மேல் விற்பனையான அன்னாசிப்பழம் 40 ரூபா முதல் 50 ரூபாவாக விலை இறங்கியுள்ளது. 20 ரூபாய், 25 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட தேங்காய் 10 ரூபா, 15 ரூபா என விலை இறங்கியுள்ளது. இதே போலவே ஏனைய சில பொருள்களின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

(உ-15)

## ஜப்பான் குழு நாளை வருகை

யாழ்ப்பாணம்,மே1

இலங்கைக்கான ஜப்பான் தூதுவரின் தலைமையிலான குழுவொன்று நாளை யாழ்ப்பாணத்திற்கு இரண்டாவது தடவையாக விஜயம் செய்கிறது.

அன்றைய தினம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அக்குழு விஜயம் செய்யும். அங்கு தொழில்நுட்பவியலாளர்களைச் சந்தித்து தொழில்நுட்ப அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் அக்குழு நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது.

(உ-15)

## இந்துமத குருபீட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே1

சர்வதேச இந்துமத குருபீடத்தின் யாழ்.மாவட்ட அமைப்பாளர்களின் ஏற்பாட்டில் இந்துமத குருமார்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று நண்பகல் ஒரு மணி முதல் சங்கானை முருகமூர்த்தி வீதியில் உள்ள யாழ்.மாவட்ட அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி ஸ்ரீஜயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

(உ-3)

## மகஸின் சிறை கைதிகளின் கோரிக்கை

மகஸின் சிறையில் சிங்களக் கைதிகளுடன் தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்து, தங்களைக் களுத்துறை அல்லது பூஸா சிறைக்கு மாற்றும்படி சில தமிழ்க் கைதிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பாக சில கைதிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் தொடர்புகொண்டு கோரிக்கை விடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-6-9)

## சமாதானத்தை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெற, பிரதான எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சியின் கொண்டாட்டம் அப்புத்தளையில் நடைபெறும்.

ஐ.தே.கட்சியின் மேதினக் கூட்டம் கொழும்பு மாநகரசபைத் திடலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிற்பகல் இரண்டு மணிக்கு நடைபெறும்.

சுதந்திரக்கட்சித் தலைமையிலான பொ.ஐ.முன்னணியின் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் அப்புத்தளை நகரசபை விளையாட்டரங்கில் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறும்.

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) கூட்டம் கொழும்பு ஹவ்லக் டவுண் பி.ஆர்.சி. மைதானத்தில் பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

பொரளை கம்பல் பார்க் மைதானத்தில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமையிலான கூட்டம் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

புதிய இடதுசாரி முன்னணி புறக்கோட்டை குணசிங்கபுர பிரைஸ் பார்க்கில் பிற்பகல் 4 மணிக்கு கூட்டத்தை நடத்தும்.

இ.தொ.காவின் கூட்டம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையில் ஹட்டனிலும் மலையக மக்கள் முன்னணியின் கூட்டம் அமைச்சர் பெ.சந்திரசேகரன் தலைமையில் நுவரெலியாவிலும் நடைபெறும். புதிய ஜனநாயகக்கட்சி இராகலையில் கூடடத்தை நடத்தும்.

வடக்கிலும், கிழக்கிலும் பல பொது அமைப்புகள் ஒன்றிணைந்து விடுதலைப் புலிகளின் வழிகாடடலில் மேதினத்தை நடத்துகின்றன.

மட்டக்களப்பில் அரச படைகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து ஆரம்பமாகும் மேதினப் பேரணி, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் சென்று முடிவடைந்ததும் அங்கு மேதினக் கூட்டம் நடைபெறும்.

சமாதானத்தை வலியுறுத்தும் மேதினப் பேரணிகள் யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலும் இன்று இடம்பெறுகின்றன.

வன்னியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் கோட்ட மட்டத்தில் மேதின எழுச்சிப் பேரணிகள், கூட்டங்களுடன் இடம்பெறவுள்ளன.

மல்லாவியில் இருந்து வாகனங்களில் புறப்படும் பேரணி, கிளிநொச்சியை அடைந்ததும் அங்கு கூட்டம் இடம்பெறும். அதேபோன்று முல்லைத்தீவு, மன்னார் கோட்டங்களிலும் எழுச்சிப் பேரணிகளுடன் கூட்டங்கள் ஏற்பாடாகியுள்ளன.

தொழிற்சங்கப் பிரதிநிதிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்தப் பேரணிகளில் பங்குபற்றுவர்.

திருகோணமலையில் மேதின எழுச்சிப் பேரணிகளோ, கூட்டங்களோ பெரிய அளவில் ஏற்பாடு செய்யப்பட்டதாக தகவல் இல்லை.(உ-3-6-10)

## புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபந்தனையுடன் அவரைப் பொலீஸார் விடுவித்திருந்தனர்.

நேற்று மட்டக்களப்பு நீதிவான் அப்துல் காதர் முன்னிலையில் துரை ஆஜரானார்.

இவரை 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் அனுமதித்த நீதிவான், வழக்கை ஓகஸ்ட் மாதம் 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவருடன் கைது செய்யப்பட்ட ஏனைய மூன்று சிவிலியன்களையும் தலா 50 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார். (உ-3)

## தடையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழியில்லை என்று நாம் கூறுகின்றோம்.

இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம அரசியல் தீர்வைக் காண்பதுதான் அரசின் நோக்கமாக உள்ளது.

புலிகள் மீதான தடையை நீக்கி அவர்களுடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்குமாறு அமெரிக்கா, பிரித்தானியா போன்ற உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

புரிந்துணர்வு உடன்படிக்கை ரத்தாவதற்கு நாம் காரணமாக இருந்தால் சர்வதேச சமூகத்தின் வெறுப்புக்கு நாம் முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்.

இதனால் பல பாதிப்புகளை எமது நாடு சந்திக்கும் நிலை ஏற்படும்.

- இப்படிப் பிரதமர் தெரிவித்ததாக அந்தச் செய்தி ஏஜென்ஸி அறிவித்தது. (உ-6-9)

## கடற்படை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும்படி கூறினேன்.

அதற்கிடையில் குண்டு அவரது வலது முழங்காலுக்கு மேல் பாய்ந்து விட்டது. உடனே மகளை நிலாவெளி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றேன். அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் திருமலை தள வைத்தியசாலைக்கு அவரைக் கொண்டுவந்து அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்தேன் - என்றார்.

மூதூர் கட்டைபறிச்சானைச் சேர்ந்த மாரிமுத்து பேச்சிமுத்து, நிலாவெளி 9ஆம் கட்டையில் கோணேசர் என்பவரின் வீட்டில் தோட்ட வேலைகள் செய்துவந்தார். சம்பவதினம் இரவு முற்றத்தில் வேலைசெய்து கொண்டிருக்கும்போது வலது முழங்கைக்கு மேல் அவர் காயமடைந்தார். (உ)

## பிரதமரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகங்கள் குறித்தும் நிலைமையைத் தெளிவுபடுத்தும்படி இக்கடிதத்தில் ஜனாதிபதி பிரதமரைக் கோரியிருந்தார் என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதியின் கடிதத்தின் உளளடக்கம் இதுவரை பகிரங்கப்படுத்தப்படவில்லை.

எனினும் பிரதமரும் இன்னும் இக்கடிதத்துக்கு பதில் எதனையும் அனுப்பவில்லை எனக் கூறப்படுகின்றது.

இக்கடிதத்துக்குப் பதில் தராமல் பிரதமர் தொடர்ந்து மௌனம் சாதிப்பாராயின் கடிதத்தின் உள்ளடக்கத்தை பகிரங்கப்படுத்துவதைத் தவிர ஜனாதிபதிக்கு வேறு வழியில்லை என்று ஜனாதிபதியின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ)


வீடியோ CD வெளியீடு
மம்முட்டி நடித்த
யூனியர் சீனியர்
பிரதிகள் உடன் பெறலாம்.
விஷ்ணு வீடியோ
கோண்டாவில்.
(C/21996)

விக்னா
கல்வி நிறுவனம்
பிரிவு 4
O/L DAY CLASS
(8.30-2.00)
ஆரம்பம்: 03.05.2002
☆ கடமை கட்டுப்பாட்டுடன் இயங்கும் ஒரே நிறுவனம்
☆ O/L பழைய பாடத்திட்டத்திற்கு வகுப்புகள் இங்கு மட்டுமே!
(3340)

NEW SCIENCE HALL
JAFFNA.
இணைந்த கணிதம்
திரு. குணம் 2004 A/L
✪ வரிசை மாற்றமும் சேர்மானமும் ✪
செவ். 3.00-5.00
ஆரம்பம்: 07.05.2002
✪ சமநிலை ✪
சனி, ஞாயிறு 7.00மணி.
ஆரம்பம்: 04.05.2002
2003 A/L
✪ சிக்கல் எண் ✪
வியா. 3.00-5.00
ஆரம்பம்: 02.05.2002
✪ மீட்டல் வினாவிடை ✪
சனி, ஞாயிறு 3.00-4.00
ஆரம்பம்: 04.05.2002
(3344)

எமது புதிய வீடியோ CD வெளியீடு
☆ யூனியர் சீனியர் ☆
பிரதிகள் உடன்பெறலாம்.
வீடியோ விமல்
(C/21993) யாழ்ப்பாணம்.

எமது புதிய வீடியோ CD வெளியீடு
☆ யூனியர் சீனியர் ☆
பிரதியை உடன்பெறலாம்.
அல்டி எலக்ரோனிக்
(C/21994) யாழ்ப்பாணம்.

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
பிரிவு 2 O/L DAY CLASS
(எமது வழமையான ஆசிரிய குழு)
ஆரம்பம்:
02.05.2002 வியாழன் 8.00a.m.
(3329)

அறிவொளி - Nallur
Co.Maths
B.ரவீந்திரன் B.Sc.
A/L 2003
✪ நூவிசைகளின் சமநிலை
Tue.4.30,Sat.,Sun.4.00-6.00
ஆரம்பம்: 04.05.2002
A/L 2004
✪ நேர்கோட்டியக்கம்
Thu. 4.00-6.00,Sat.,Sun.2.00-4.00
ஆரம்பம்: 02.05.2002
(3345)

தேவை
பத்திரிகை விநியோகிப்பதற்கு ஆள்கள் தேவை. உடன் நேரில் வரவும். சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஆளணி முகாமையாளர்,
உதயன் பத்திரிகை நிறுவனம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(C/21979)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.